Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 239 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 07, செவ்வாய் 23.07.2013



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

# கறுப்பு ஜுலை நினைவு நிகழ்வு புலம்பெயர் நாடுகளில் இன்று



யாழ்ப்பாணம், ஜுலை 23

1983 ஆம் ஆண்டு ஜுலை 23 இலங்கை வரலாற்றில் கறுப்புத்தினம்-இரத்தக் கறைபடிந்த நாள். பேரின வாதிகள் மிருகங்களாக மாறித் தமிழர்களை வேட்டையாடிய கொடுமை மிகுநாள். ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொலையுண்ட 29 ஆவது நிறைவு ஆண்டு.

இந்த இனப்படுகொலை அரங்கேறி 30 ஆவது ஆண்டை எட்டியதை முன்னிட்டு பிரிட்டனில் இன்று செவ்வாய்க் கிழமை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் புலம்பெயர் தமிழர்கள் வாழும் தேசங்களிலும் பல்வேறு அனுஷ்டிப்பு நிகழ்வுகள்

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பினருடன் இன்று லண்டன் எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு, ஜுலை 23

உண்மை நிலவரங்களைக் கண்டறிவதற்காக உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக்குழு இன்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவுள்ளது.

கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும் மேற்படி சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் செயலாளர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட குழுவினர் பங்கேற்பார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் பிரிட்டன் நாடாளுமன்றக்குழு கிளிநொச்சி கச்சேரிக்கும் செல்லவுள்ளது.

அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம் செய்யும் குறித்த குழுவினர், இடம்பெயர்ந்த மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அத்துடன், இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் இந்தக் குழு செல்லும். (த-சி)

## இந்தியா



பக். 06

டெசோ தீர்மானங்களை நிறைவேற்றக் கோரி டில்லி, தமிழகத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

## உலகம்



பக். 07

அதிர்ந்தது நிலம்

## விளையாட்டு



பக். 23

இங்கிலாந்தின் வேகத்தில் சுருண்டது ஆஸ்திரேலியா

# காணாமற்போனோர் குறித்து ஐ.நா. மீண்டும் அதீத கவனம்

## பொறுப்புடன் பதிலளிக்குமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை

நியூயோர்க், ஜுலை 23

இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் உடன் கண்டுபிடிக்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா. நிபுணர்குழுவொன்று வலியுறுத்தி உள்ளது. இலங்கை உட்பட பல நாடுகளில் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர்குழு ஒன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைக்குழு இலங்கையில் காணாமற் போனவர்களின் நிலை குறித்தும் தனது தீவிர கவனத்தை செலுத்தி உள்ளது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் அந்தக் குழு முதற்கட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தச்சம்பவங்களின்பின்னணி விரிவாக ஆராயப்படவேண்டும். அத்துடன் இதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப் படவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

காணாமற்போதல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை பொறுப்பாளிகளாக்கித் தண்டிப்பதற்கு இவை மிக அவசியமானவை என்றும் அந்தக் குழு வலியுறுத்தி இருக்கிறது.

வலுக்கட்டாயமாக அல்லது தன்னிச்சையாக காணாமற் போனவர்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு அதன் அவசர கால செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் நியூயோர்க்கில் கூட இந்த விசாரணைகளைமேற்கொண்டுள்ளது.

கடந்த 6 மாத காலங்களில் நிகழ்ந்த 17 வலுக் கட்டாய காணாமற்போதல் சம்பவங்கள் மற்றும் இலங்கை உட்பட 25 நாடுகளில் நிகழ்ந்த வெவ்வேறு 400 காணாமற்போதல் சம்பவங்கள் தொடர்பிலும் ஐ.நா. நிபுணர்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவரான ஒலிவர் டி.புரோவில் இது குறித்து கூறுகையில், வலுக்கட்டாயமாக காணாமற் போகச் செய்யப்பட்டமை தற்செயல் சம்பவங்கள் அல்ல. அவை முன்கூட்டியே திட்டமிட்டு செய்யப்பட்டவை - தண்டிக்கப்படவேண்டியவை என்றார். (த-ப)

## மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையுடன் அமெ. மோதல்

வொஷிங்ரன், ஜுலை 23

மனித உரிமைகள் தொடர்பான விவகாரத்தில் இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நிலவிவரும் மோதல்கள் மேலும் இறுக்கமடைந்துள்ளன.

ஐ.நாவுக்கான அமெரிக்காவின் புதிய அலுவலராக நியமிக்கப்படவுள்ள சமந்தாபவர், இலங்கை மனித உரிமைகள் விவகாரத்தை கையில் எடுத்துள்ளமையே இந்த இறுக்கமான நிலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு மிகவும் நெருக்கமான சமந்தாபவர் நியமிக்கப்படவுள்ளார்.

இந்த நியமனம் குறித்தும், சமந்தாபவரின் திட்டங்கள் குறித்தும் அமெரிக்க செனட் சபைக்கு வெளியுறவுக் குழுவின் தலைவர் றொபேட் மெனென்டெஸ் அண்மையில் விளக்கமளித்தார்.

''இலங்கையின் மனித உரிமை மீறல்கள், இலத்தீன் அமெரிக்காவின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஆபிரிக்காவில் எச்.ஐ.வி,

தொடர்ச்சி: பக்கம் 21

## நேற்றுடன் முடிவுக்கு வந்தது கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு

யாழ்ப்பாணம், ஜுலை 23

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடுகள் தொடர்பான இழுபறி நிலைமை நேற்றுடன் முடிவுக்கு வந்தது. வடக்கின் 5 மாவட்டங்களிலும் கட்சிளின் ஆசனப் பங்கீடுகள் திருப்திகரமாகப் பங்கிடப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், யாழ். மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 7 ஆசனங்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ் 4 ஆசனங்கள், ரெலோ 3 ஆசனங்கள், புளொட் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுக்கு தலா 2 ஆசனங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுக்கு தலா 3 ஆசனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு ஓர்ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, ரொலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு ஆகியவற்றுக்கு தலா 2 ஆசனங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகியவற்றுக்குத் தலா ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ரெலோ 3 ஆசனங்கள். இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலா 2 ஆசனங்களும் புளொட்டுக்கு ஓர் ஆசன

தொடர்ச்சி: பக்கம் 21

## மீனவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜுலை, 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று அதிகாலை தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காணமற்போயுள்ளார் எனவும் அவரது படகு மட்டும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடிக்கச் சென்ற இருவர் இருவாரங்களில் காணாமற் போயுள்ளமை அந்தப் பகுதி மீனவர்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த முத்துச்சாமி மணிமாறன் (வயது-40) என்பவரே நேற்று திங்கட் கிழமை அதிகாலை 2 மணிக்கு படகில் தொழிலுக்குச் சென்றுள்ளார்.

பின்னர் அவர் கரைக்குத் திரும்பாததால் ஏனைய மீனவர்கள் தேடிக் கடலுக்குச் சென்றுள்ளனர். இதன் போது அவரது படகு மட்டும் கடலில் கண்டு பிடிக்கப் பட்டது.

காணாமற் போனவரைத் தேடும் பணிகள் நேற்று

தொடர்ச்சி: பக்கம் 21

## 30 பவுண் நகைகளுடன் 'டிமிக்கி' கொடுத்த பெண்

### கணவர் சிக்கினார் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம், ஜுலை, 23

30 தங்கப் பவுண் நகைகளை இரவலாகப் பெற்றுக் கொண்ட பெண் அவற்றைத் திருப்பிக் கொடுக்காமல் தலைமறைவாகி விட்டார். அதனால் அவரது கணவரைத் தாம் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் குறித்த நகைகளை அயல்

தொடர்ச்சி: பக்கம் 21

## முல்லைத்தீவு குடும்பஸ்தரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜுலை 23

முல்லைத்தீவு மாவட்டம் உண்ணாபிலவு கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் முதல் காணமற்போயுள்ளார் என முல்லைத்தீவு பொலிஸ்

தொடர்ச்சி: பக்கம் 21

உதயன் 23/07/2013

# வன்னியில் நடப்பது இராணுவ நிர்வாகம்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 23

தெற்கிலுள்ள மக்களுக்கும், அனைத்துலக சமூகத்துக்கும், இலங்கை அரசு காட்டுகின்ற படத்துடன், வடக்கின் நிலை, குறிப்பாக கிளிநொச்சியின் நிலை முற்றிலும் வேறுபட்டது.வடக்கில் இராணுவ நிர்வாகமே நடக்கிறது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஷோசலிஸ இளைஞர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளருமான பிமல் ரத்நாயக்க கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது குறித்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் ஏனையோர் அமைதியான நிகழ்வுகளை நடத்தவும், நன்கொடைகளை வழங்கவும் அங்குள்ள அரை இராணுவ நிர்வாகம், தடை விதிக்கிறது.

நாம் ஒரு நாடகப் போட் டியை நடத்த வேண்டும் என்றாலும் சரி அல்லது, சிறுவர்களுக்குப் பாடசாலை கருவிகளை அன்பளிப்புச் செய்ய வேண்டும் என்றாலும் சரி, அதற்கு முன்னர் இராணுவ நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டும்.

கிளிநொச்சி வலயத்தில் உள்ள 52 பாடசாலைகளில் பெரும்பாலானவற்றுக்கு மின்சார வசதியில்லை. ஆசிரியர் விடுதிகளுக்கும் மின்சார வசதிகளில்லை. பெரும்பாலான பாடசாலைகள் போரில் சேதமடைந்து விட்டன. மின் கட்டணம் செலுத்தப்பட்டாதால், பாடசாலைகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள முன்னணிப் பாடசாலை ஒன்றின் அதிபர், தானும் ஆசிரியர்களும் இணைந்து 86 ஆயிரம் ரூபா மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தியே மின்சாரத்தைப் மீளப் பெற்றதாகக் கூறினார்.

கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகளின் 30 ஆயிரம் ரூபா, 40 ஆயிரம் ரூபா மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாத அரசு, பல பில்லியன் ரூபா திட்டங்களைத் தீட்டுகிறது, இரவுக் களியாட்டங்களுக்கான மின்சாரத்துக்கு மில்லியன் ரூபா கணக்கில் செலவிடுகிறது.நாம் கிளிநொச்சியில் உள்ள சில பாடசாலைகளுக்குக் கணினிகள், பயிற்சிப் புத்தகங்களை வழங்கவுள்ளோம். ஆனால், அந்தப் பாடசாலைகளின் பெயர்களை வெளியிட முடியாது. ஏனென்றால் அங்குள்ள அரை இராணுவ நிர்வாகம் எமது திட்டத்தைத் தடுத்து விடும்–என்றார். (த)

# மரணங்களில் வியாபாரம் நடத்துவோரே எம் இலக்கு

## புதிய குடிவரவுக் கொள்கையை நியாயப்படுத்தி ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத் கருத்து

கான்பரா,ஜூலை 23

தஞ்சக் கோரிக்கையாளர்கள் தொடர்பான ஆஸ்திரேலியாவின் புதிய கொள்கையை நியாயப்படுத்தி அந்நாட்டுப் பிரதமர் கெவின் ரூத் கருத்து வெளியிட்டுள்ளார்.

மரணங்களில் வியாபாரம் நடத்துபவர்களையே தமது கொள்கை இலக்கு வைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கைச்சாத்தான உடன்படிக்கையின்படி, படகுகள் மூலம் ஆஸ்திரேலியா நோக்கிச் செல்பவர்கள் பப்புவா நியுகினியாக்குப் பரிசீலனைக்காக அனுப்பப்படுவார்கள்.

அகதிகளாக அங்கீகரிக்கப்படுபவர்கள் பப்புவா நியுகினியாவிலேயே குடியமர்த்தப்படுவார்கள்.அதற்குக் கைமாறாக அந்நாட்டுக்கு ஆஸ்திரேலியாவிடமிருந்து பெருமளவு முதலீடுகள் கிடைக்கும்.இந்தக் கடும்போக்கு முடிவு குறித்து அரசு வருத்தம் தெரிவிக்கப் போவதில்லை என்று கெவின் ரூத் கூறியுள்ளார்.

இவர்கள் மரணத்தில் பிழைப்பு நடத்துகிறார்கள். இந்த வியாபார உத்தியை முதலில் ஒழித்துக் கட்டவேண்டும் என்றும் ரூத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரூத் அதிரடியாகக் கொண்டுவந்த இந்தக் கொள்கை மாற்றத்தைப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் கண்டித்துள்ளன.

உலகின் மிகவும் நலிவடைந்த மக்களைக் கைவிட்டு ஆஸ்திரேலியா முகத்தைத் திருப்பிக்கொண்டுள்ளது என்று சர்வசே மன்னிப்புச் சபை கூறியுள்ளது.



"பிரதமர் ரூத் அதிரடியாகக் கொண்டுவந்த இந்தக் கொள்கை மாற் றத்தைப் பல் வேறு மனித உரிமை அமைப்புகளும் கண்டித் துள்ளன.

ஆஸ்திரேலியாவுக்குள் தஞ்சம் கோரி படகுகளில் வருவோரின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் வெகுவாக அதிகரித்துள்ளது.

ஆஸ்திரேலிய பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே இருக்கின்ற நிலையில், தேர்தல் பிரசாரத் தில் அகதிகள் விவகாரம் முக்கிய இடம் பிடித்துள்ளது. (த)

# மன்னார் ஆயரின் பணிப்பின் பேரிலேயே மஹிந்தவைச் சந்தித்துப் பேசினோம்

## கலந்துகொண்ட குருமார்கள் விளக்கம்

மன்னார், ஜூலை 23

மன்னார் மாவட்டத்தில் அமைச்சர் ஒருவரின் தலையீட்டால் அரசின் தொழில் வாய்ப்புக்கள், அபிவிருத்திப் பணிகள் என்பன அரச கொள்ளைக்கு முரணாக ஒரு இனத்துக்கு மட்டுமே வழங்கப்படுவதை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியதாகவும், இந்தச் சந்திப்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசெப் ஆண்டகையின் பணிப்பின் பேரிலேயே கலந்து கொண்டதாகவும் ஜனாதிபதியைச் சந்தித்த குருமார்கள் தெரிவித்தனர்.

மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு, மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று திங்கட் கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொண்ட அருட்தந்தை எமிலியான்ஸ்பிள்ளை, அருட்தந்தை டெஸ்ன் குலாஸ், அருட்தந்தை றெஜினோல்ட் பிரான்சிஸ், அருட்தந்தை எஸ்.ஜெயபாலன், அருட்தந்தை அருள்ராஜ்குரூஸ், அருட்தந்தை செபமாலை ஆகியோர் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர்.

அவர்கள் அங்கு குறிப்பிட்டவை வருமாறு:

பிறமாவட்டங்களில் உள்ள மக்கள் மன்னார் மாவட்டத்துக்கு அழைத்துவரப்பட்டு வதிவிடமும், வாழ்வாதாரத் தொழில் வாய்ப்புக்களும் வழங்கப்படும். அதேவேளையில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் வதிவிடமும் தொழில்வாய்ப்புக்களுமின்றி கஷ்டப்படுகின்றனர்.

அரச வேலைவாய்ப்புக்களில் நேர்முகத் தேர்வுகளின் போது அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்பட்டுக் கல்வி தகைமைகள் குறைந்த நபர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

பாரம்பரிய புராதன கத்தோலிக்க கிராமமான முள்ளிக்குள மக்களின் பெரும்பான்மையான காணிகள், அரச தேவைக்காக சுவீகரிக்கப்பட்டன. இதற்குப் பதில் காணி வேறிடத்தில் வழங்கல், கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளுக்கு பதிலாகப் புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுத்தல், தொழில் வசதிக்கான உபகரணங்கள் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தலைமன்னார் 'பியர்' கிராமத்தில் போரின் முன்பிருந்து நீண்ட காலமாக வசித்துவரும் மக்களின் வதிவிடங்களும், ஆலயத்துக்குச் சொந்தமான காணியும், சேமக்காலை அமைந்திருக்கும் காணியும், கடற்படையினரின் முகாம் விஸ்தரிப்புக்கான அபகரிப்பு தொடர்பிலும் ஆராயப்பட்டது.

கடற்படையினரின் முகாமுக்கு மறு பக்கமாகவுள்ள எல்.ஆர்.சி.காணி பல ஏக்கர்கள் இருந்தும் அவை தனியொரு அமைச்சரின் தேவைக்காக ஒதுக்கப்பட்டமையினாலேயே கடற்படையினர் மக்கள் காணிகள் சுவீகரித்தமை சுட்டிக்காட்டப்பட்டது.



இவற்றைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய அமைச்சுப் பணிகளை மன்னார் மாவட்டத்துக்கு நேரடியாகச் சென்று மேற்கொள்ள வேண்டும். மன்னார் மக்களின் குறைகளை விசாரித்து அவற்றைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் இடம்பெறுவதாகச் சொல்லப்பட்ட இழப்பீடுகளுக்குத் தீர்வுகாணும்பொருட்டு அமைச்சர் சுசில் பிரமேஜெயந்தவை மன்னாருக்கு இன்று அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தன்னைத் தவிர எந்தவொரு அமைச்சரும் அரச காணிகளில் அதிகாரமற்றவர்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி தலை மன்னார் காணி சுவீகரிப்புத் தொடர்பில் ஆராய்வதாகத் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மக்களை நேரடியாகச் சந்திப்பதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்தார்–என்றனர்.(த–5–12)

# கிணற்றில் சிசு சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

வட்டுக்கோட்டையில் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட ஆண் சிசுவில் தொப்புள் கொடி இறுக்கிப் பொருத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. சிசுவுக்கு உரியவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டவில்லை என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை தெற்கு முதலி கோயிலடியை அண்மித்துள்ள பற்றைக் காணியிலுள்ளகிணற்றிலிருந்தே குறித்த சிசு நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

விறகு வெட்டுவதற்குச் சென்றிருந்த ஒருவரே கிணற்றில் சிசு இருப்தைக் கண்டு அயலவருக்குத் தகவல் கொடுத்துள்ளார். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பிறந்து ஒரு நாள் என்று நம்பப்படும் குறித்த சிசுவின் தொப்புள் கொடி இறுக்கிப் பொருத்தப்பட்டமை தெரிய வந்துள்ளது.

"அந்தச் சிசு வைத்தியசாலையில் அல்லது வைத்தியத்துடன் தொடர்புபட்ட அதுபற்றித் தெரிந்தவர்களின் உதவியுடன் பிறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தொப்புள் கொடி இறுக்கிப் போடப்பட்டமையால் அந்தச் சிசு வைத்தியசாலையில் அல்லது வைத்தியத்துடன் தொடர்புபட்ட அதுபற்றித் தெரிந்தவர்களின் உதவியுடன் பிறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எனினும் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த–4–78)

# 5 மாவட்டங்களின் செயலகங்களிலும் இன்று முதல் 'பொலிஸ் போஸ்ட்'

யாழ்ப்பாணம், ஜூலை 23

வேட்பு மனுத் தாக்குதலுக்கு முன்பாகவே வடக்கின் 5 மாவட்டங்களிலும் மாவட்ட செயலகங்களில் தனித்தனியான 'பொலிஸ் போஸ்ட்' அமைக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.


இந்த நடவடிக்கை வழமையான தேர்தல் திணைக்கள செயற்பாடு என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (த–5)

# செயற்கை அவயவங்களை பொருத்தும் நடமாடும் சேவை

## வன்னியில் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 23

மன்னார் 'மேத்தா பவுண்டேசன்' நிறுவனத்தால் கடந்த 2 மாதங்களாக செயற்கை அவயவங்களை பொருத்துவதற்கான நடமாடும் சேவை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் நடத்தப்பட்டுவருகிறது.



நடமாடும் சேவையில் 100 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த நடமாடும் சேவையூடாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறமுடியாத பயனாளிகள் நேரடி நடமாடும் சேவையால் பயன் பெற்று வருகின்றனர். குறிப்பாக இந்த நடமாடும் சேவையில் அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்கள் பொருத் தப்படுவதுடன் பழைய அவயவங்களும் சீர்செய்யப்படுகின்றன. இதனைவிட மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (வ-14)

# 800 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கையளிப்பு

## தென்மராட்சியில் இடம்பெற்ற நடமாடும் சேவையில்

தென்மராட்சி, ஜூலை 23

தென்மராட்சி பிரதேசத்தில் 3 இடங்களில் நடத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவையில் எண்ணூறுக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டை பெறுவதற்குரிய ஆவணங்கள் கொண்டு வராத பலரை அடுத்து இடம்பெறவுள்ள நடமாடும் சேவைக்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பிப்போர், தொலைந்த, பெயர்மாற்றம் (கணவரது பெயர்) பழுதடைந்த, உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விண்ணப்பித்தோர் அதற்கான ஆவணங்கள் கையளித்தல் வேண்டும்.

எதிர்வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி தென்மராட்சி கிழக்கு பிரதேசத்துக்கான நடமாடும் சேவை உசன் இராமநாதன் ம.வி.யில் நடத்தப்படவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் தமது விண்ணப்பங்களை சமர்பிக்கவுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தேவையான ஆவணங்கள் தொடர்பான விவரங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட் டுள்ளது.

வரணி, கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் உரிய ஆவணங்கள் இல்லாததால் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள் பிரதேச செயலகத்தில் அவற்றினை இலவசமாக பெறக் கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே கிராம அலுவலரின் பரிந்துரைக் கடிதத்துடன் பிரதேச செயலக உதவிப் பதிவுகாரர் அலுவலகத்துக்கு வருகைதந்து விண்ணப்பித்து பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வாகன இலக்கத் தகடுகள் யாழ்.செயலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமைச் செயலகத்தினால் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வாகன உரிமையாளர்கள் அலுவலக நாள்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிக்கும் இடையில் வாகனப் பதிவுப் புத்தகத்துடன் யாழ்.செயலகத்துக்கு நேரடியாக வருகை தந்து வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.யாழ்.செயலகத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாகன இலக்கத் தகடுகளின் விவரங்களை 'உதயன்'அலுவலகத்துக்கு வந்து பார்வையிட முடியும். (ஒ-14)

# அறிவிக்கப்படாத மின்தடையால் யாழ்.நூலக வாசகர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மின்சார சபையின் அறிவிக்கப்படாத மின்வெட்டால் யாழ். பொதுநூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொது நூலகத்திலுள்ள மின்பிறப்பாக்கி இயங்காமையாலேயே இந்த நிலைமை ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.பொது நூலகத்தில் உள்ள சிறுவர் நூலகம், பிரதியாக்கப்பகுதி (போட்டோக் கொப்பி), கணினிப் பகுதி என்பன மின்சாரம் தடைப்படுவதனால் முற்றாக செயலிழக்கின்றன.

இதனால் நூலகத்தை நம்பி வரும் வாசகர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர். குறிப்பாக தூர இடங்களிலிருந்து வரும் வாசகர்கள் தமக்குத் தேவையான புத்தகத்தை பிரதியாக்கம் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் கணினிப் பகுதிக்கு வரும் பலரும் மின்தடையால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கணினியால் ஓர் ஆவணத்தை தரவிறக்கம் செய்யும் போது மின் தடைப்படுவதால் அவற்றை தரமிறக்கம் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஆனால் அவற்றைக் கருத்தில் கொள்ளாது அங்கு பணியாற்றும் ஊழியர்கள் வாசகர்களிடம் பணத்தை அறவிடுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் பொதுசன நூலகத்தின் பிரதம நூலகரின் கருத்தை அறிய முடியவில்லை. இருப்பினும் அங்குள்ள ஊழியர்களிடம் கேட்டபோது, பின்பிறப் பாக்கிக்கு மணித்தியாலயத்துக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபா டீசல் செலவு ஏற்படுவதாகவும் அதனாலேயே பொதுசன நூலக மின்பிறப்பாக்கியை பயன்படுத்துவதில்லை என்றும் தெரிவித்தனர். (வ-5)

# முல்லைத்தீவில் குடிசைக் கைத்தொழில் விரிவாக்கம் குறித்து கலந்துரையாடல்

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவில் குடிசைக் கைத்தொழிலை விரிவாக்கம் செய்வது தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகளால் கலந்துரையாடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கைத் தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை ஆகிய நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்றிட்டங்கள்தொடர்பாக ஆராயப்பட்டது. (வ-14)

## எழுதுமட்டுவாழ் தெற்கில்

# மேலும் ஒரு தொகுதி மக்கள் மீள்குடியமர்வு

தென்மராட்சி, ஜூலை 23

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தில் மேலும் ஒரு தொகுதி குடும்பங்கள் கடந்த வாரம் மீளக்குடியமர்த்தப் பட்டுள் ளனர்.

எழுதுமட்டுவாழ் பாடசாலை வீதியில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட பகுதியிலேயே அண்மையில் மீள்குடியமர்வு இடம்பெற்றது.

சுமார் 40 குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் தம்மை மீளக் குடியமர்த்த பாடுபட்ட தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு பதில் கிராம அலுவலர் ஆகியோருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

இதேவேளை மீளக்குடியமர்ந்த மக்கள் அரசால் வழங்கப்படும் தற்காலிகக் கொட்டில் உட்பட உதவிகளைப் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

> சுமார் 40 குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் தெற்கு, கிராம அலுவலர் பிரிவில் முகமாலை வடக்கு, பொந்தர் குடியிருப்புக்கும் எழுதுமட்டுவாழ் பிரிவுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள பிரதேசத்திலேயே மீள்குடியமர்வு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நடமாடும் சேவை கொக்குவிலில் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 23

நல்லூர், பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஜே/99, ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/123/, ஜே/124, ஜே/125, ஜே/126, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பெறலாம்.

நடமாடும் சேவையில் பங்கு பற்றும் பயனாளிகள் அந்தந்தப் பிரிவு கிராம சேவகருடன் தொடர்புகொள்ளலாம்.(வ-14)

# யாழ்ப்பாணத்துக்கான ரயில்சேவை; புனரமைப்புப் பணிகள் மும்முரம்

## பாதைகள், பாலங்கள் துரிதமாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23


2014ஆம் ஆண்டின் இறுதிக்குள் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ரயில்வே திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் கிளிநொச்சி வரைக்குமான ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மாங்குளம், முறிகண்டி, கிளிநொச்சி போன்றவற்றுக்கான ரயில்வே நிலையங்கள் அமைக்கும் பணிகளும் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பகுதியில் தண்டவாளங்கள் போடும் பணிகள் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் நிறைவுபெற்றுவிடும்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டின் இறுதிக்குள் சாவகச்சேரி வரைக்குமான ரயில் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிடும். அடுத்த வருட முடிவுக்குள் யாழ்ப்பாணம் வரை ரயில்சேவை விஸ்தரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையுள்ள 29 ரயில் நிலையங்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.



தற்போது புளியங்குளம், மாங்குளம், முறிகண்டி, கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு, பளை, எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை உள்ளடங்கலாக ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மதவாச்சி-தலைமன்னார் வரையான ரயில் பாதையும் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றது. (எ-17)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு பெருவிழா திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில்

## சனி, ஞாயிறு இருதினங்கள் நடைபெறும்

யாழ்.மறை மாவட்டத்தினரும், தமிழ்ச் சங்கத்தினரும் இணைந்து தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுப் பெருவிழாவை எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முதல்நாள் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்றத் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.நூற்றாண்டு விழாக் குழுச் செய லர் அருட் கலாநிதி அ.பி ஜெயசேகரம் தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொடக்க உரையை தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆற்றவுள்ளார்.

தனிநாயகம் அடிகளார் எழுதிய தமிழ்த்தூது நூல் மீள் பதிப்பாக வெளியிடப்படவுள்ளது. இதனை கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் வெளியிட்டு வைக்க நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பெற்றுக்கொள் வார். தமிழ் நாயகம் என்ற நூற்றாண்டு விழாச் சிறப்பு மலரை அதன் பதிப்பாசிரியர் அருட்பணி செ.அன்புராசா அடிகள் வெளியிட்டு வைக்க திருமறைக் கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் பெற்றுக்கொள்வார்.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் புதுப்புனல் பாய்ந்திடுக... என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெறும். இதில் இயல் செழித்திட என்ற பொருளில் கவிஞர் த.ஜெயசீலனும் இசை பெருகிட என்ற பொருளில் கவிஞர் நெடுந்தீவு செ.மகேசும் அரங்கு மிளிர்ந்திட என்ற பொருளில் கவிஞர் கை.சரவணனும் அறிவியல் ஓங்கிட என்ற பொருளில் கவிஞர் ஞான. ஆதவனும் ஆற்றவுள்ளனர். கல்வியியல் அறிஞனாகத் தனிநாயகம் அடிகளார் என்ற பொருளில் யாழ். பல்கலைக் கழகக் கல்வியியல் பேராசிரியர் மா.சின்னத்தம்பி கருத்துரை வழங்குவார். திருமறைக் கலா மன்றத்தினர் வழங்கும் தமிழ் ஆடலும் செந்தமிழின் மாண்புரைத் தோன் என்ற பொருளில் வாழ்க்கைச் சித்திரம் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம்நாள் விழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆய்வரங்காக இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை கலாநிதி த.கலாமணியும் ஆய்வரங்கத் தொடக்கவுரையை மூத்த தமிழ்ப் பேராசிரியர் எஸ். சிவ லிங்கராஜாவும் நல்குவார். ஆய்வரங்க இணைப்பாளர் உரைகளை யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறைகளின் தலைவர் பேராசிரியர் ஞா.பிலேந்திரன் ஆகியோர் வழங்குவர். மேலும் நூற்றாண்டுவிழாவை யொட்டி வடமாகாண மாணவரிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் துணைவேந்தரால் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். நிறைவுரையை நூற்றாண்டுவிழாக் குழுத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றுவார்.

மாலை 6.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத் திறந்த வெளியரங்கில் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை கலாநிதி ஆறு.திருமுருகனும் மாணவர் சார்பிலான உரையை யாழ். இந்துக்கல்லூரிமாணவன்ஸ்ரீசிவஸ்கந்தஸ்ரீயும் நல்குவர்.

மேலும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவை நடுவராகக் கொண்டு தமிழரின் எதிர்கால அடித்தளம் மொழியா? பண்பாடா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறும். நிறைவாகத் திருமறைக் கலாமன்றப் படைப்பாக அற்றைத் திங்கள் என்ற நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் நன்றியுரை நல்குவார். (எ-4)

## நல்லூர் கந்தனைத் தரிசிக்க கலாசார உடையுடன் வாருங்கள்

### தவிருங்கள் தங்க நகைகளையும்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நல்லூர் ஆலயத்தின் உற்சவகாலத்தில் பக் தர்கள் தங்க நகைகளை அணிவதைத் தவிர்ப்பது டன் கலாசார உடைகளை அணிந்து ஆலயத்தின் பாரம்பரியத் தைப் பேணுமாறு யாழ். மாநகர சபை அறிவித் துள்ளது.

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட்மாதம் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

இந்தமுறை திருவிழாக் காலங்களில் அதிகளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆலயத்துக்கு வருபவர்கள் கலசார உடைகளை அணிவ தைக் கட்டாயம் கடைப் பிடிக்க வேண்டும். அத்துடன் ஆலயத்துக்கு வருகைதருவோர் ஆலய சூழலில் பாதணி களுடன் நடமாடுவதை யும் தவிர்க்க வேண்டும். (ஒ-14)

# சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் மன்னாரில் அரசு தீவிரம்

## குற்றஞ் சாட்டுகிறார் செல்வம் எம்.பி.

மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் அரசு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்;

மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் அரசு 6 ஆயிரம் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

> “ மன்னார் மாவட்டத்தின் கரை யோரப் பிரதேசங்கள் உள்ள டங்கலாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் அரசு 6 ஆயிரம் சிங்களக் குடியேற்றங் களை மேற்கொள் வதற்கான முயற்சி யில் ஈடுபட்டு வரு கின்றது.

ஆனால் போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து சென்று வேறு இடங்களில் அகதிகளாக வாழ்ந்து வரும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் குடும் பங்களை உரிய முறையில் அவர்களுடைய சொந்த மண்ணில் குடியமர்த்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளாது அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தாது சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொண்டால் இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, போரினால் பாதிப்புக்களையும், இழப்புக்களையும் சந்தித்த தமிழ், முஸ்லிம் மக்களை அவர்களுடைய சொந்த மண்ணில் உரிய முறையில் குடியமர்த் துவதற்குரிய நடவடிக்கை களை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (க-12)

## வேதாள வெங்காயச் செய்கை மும்முரம்

நெடுந்தீவு பிரதேசத்தில் இரண்டு ஹெக்ரேயர் நிலப் பரப்பில் விவசாயிகள் வேதாள வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப்பிரதேசத்தில் சரா பிட்டி பகுதியில் பத்து விவ சாயிகள் வேதாள வெங் காயம் பயிரிட்டுள்ளனர். தற்போது வெங்காய பயிர்கள் மிகவும் நல்ல நிலையில் உள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வேதாள வெங்காயச் செய்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் செய்கையை இந்தப் பிர தேசத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கும் விவசாயிகள் அதிக ஆர் வம் காட்டியுள்ளனர். (வ-7)

## தெ்ன்மராட்சி வலயத்தில் விரைவில் ‘சிறகுகள்’

தென்மராட்சி கல்வி வலயத்தின் 'சிறகுகள்' சஞ்சிகை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

ஜூலை 15 ஆம் திகதி வரை வலயத்தால் மேற்கொள் ளப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான செய்தித் தொகுப் பைக் கொண்டதாக சஞ்சிகை அமையவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ-9)

## தனியார் பஸ்தரிப்பு நிலைய கூரைகள் மீண்டும் போடப்படுமா?



யாழ்ப்பாணம், ஜூலை 23

முற்றவெளியில் உள்ள தனியார் பஸ்தரிப்பு நிலையக் கட்டட கூரைகளை புனரமைப் பதற்காக யாழ்.மாநகர சபை ஏற்பாட்டில் கழற்றப்பட்டுள்ளன.

இந்தக் கூரைகள் கழற்றப் பட்டு சில தினங்கள் கடந்தும் அவை சீர்செய்யப்படாததால் பயணிகள் மற்றும் பஸ்சாரதிகள், நடத்துநர்கள் தரிப்பிடத்தில் நிற்க முடியாது சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-9)


# மரண அறிவித்தல்



## சின்னையா கதிர்காமு

நாவற்காடு, வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கதிர்காமு நேற்று (22.07.2013) திங்கட்கிழமை நாவற்காடு வரணியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - வீராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம், தில்லைநாதன் ஆகியோரின் அன்பு சகோதரரும் இராமச்சந்திரன் ( நில அளவை உதவியாளர், யாழ்ப்பாணம்), இராமநாதன் (வரணி), இராமலிங்கம் (வரணி), இராசலட்சுமி (லண்டன்), இராசேந்திரம் (பிரான்ஸ்), இராசகாந்தன் (பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவவதனி, சாந்தலட்சுமி, குணேசன் (லண்டன்), குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும் ராமராஜன், ரசித்தா, பிரதீபா, பிரசாந், பிரணவன், சியானி, அஸ்வின் ஆகியோரின அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2013) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்கா டு, வரணி.
0779491015

(31090)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி கமலாம்பிகை குழந்தைவேலு

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை குழந்தைவேலு நேற்றுமுன்தினம் (21.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

(31092)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தம்பிப்பிள்ளை வில்வரத்தினம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி, சுன்னாகத்தை வசிப்பிடமா கவும் கொண்ட தம்பிப்பிள்ளை வில்வரத்தினம் நேற்று (22.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சிவராசா, தேவதாசன் மற்றும் சவுந்தரநாயகம் ஆகியோரின் சகோதரியும், ஆறுமுகநாதன், அகிலநாயகி (கனடா), சிவகுமாரன், சந்திரகுமாரன் (ஓய்வு நிலை சுன்னாகம் ப.நோ.கூ.ச) ஆகியோரின் தாயும், சுப்பிரமணியம் (கனடா), சரஸ்வதி, சிவமலர், பாலசரஸ்வதி ஆகியோரின் மாமியும், சுரேஸ் (கனடா), றமணன், சாந்தினி, தர்ஸா, டிலக்ஷன், பிறிந்தாபன், தர்சினி கனிந்தன், லக்ஷ்மணன், குருபரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், ஜெனிஸ்காவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.

தகவல்: சந்திரகுமாரன்
(ஓய்வு நிலை சுன்னாகம் ப.நோ.கூ.ச)

## பழைய சேலைகளில் இருந்து மாற்று ஆடைகள் தயாரிப்பு

### நன்கொடையாக வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23
'பாசிக்' நிறுவனத்தால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பழைய சேலைகளில் இருந்து மாற்று ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டத்துக்கு நன்கொடையாளர்களிடம் இருந்து பழைய சேலைகளை பாசிக் நிறுவனம் கோரியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் போர் மற்றும் இயற்கை இடர்களின் போது பாதிக்கப்பட்டு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஓர் செயற்றிட்டமாக பாசிக் நிறுவனம் இதனை முன்னெடுத்துள்ளது.

தற்போது பழைய சேலைகளில் இருந்து புதிய மாற்று ஆடைகளை உருவாக்கி ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில் ஏற்றுமதித் தரத்துக்கு ஏற்ப மாற்று ஆடைகளைத்தயாரிப்பதற்கு பழைய சேலைகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த முயற்சிக்கு கைகொடுக்க ஆர்வமுடைய நன்கொடையாளர்கள் பழைய சேலைகளை பாசிக் நிறுவனத்திடம் வழங்க முடியும்.

முற்று முழுதாக இலாப நோக்கம் கருதாமல் பெண்களது வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காக இந்தத் திட்டத்தை பாசிக் நிறுவனம் முன்னெடுத்துள்ள நிலையில் இதனை ஊக்கப்படுத்துமாறு பாசிக் நிறுவனம் கோரியுள்ளது.

பாவனைக்கு பயன்படுத்தாத சேலைகளை பலர் வீடுகளில் தேக்கி வைத்துள்ளார்கள்.

இதனால் எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இத்தகைய சேலைகளை நன்கொடையாக வழங்கி பயனாளிகளாக உள்ள பெண்களது தொழில் முயற்சியை ஊக்குவிக்கலாம்.


பாசிக் நிறுவனத்தின் மேற்பார்வையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கபட்டுள்ள நிலையில் நன்கொடையாளர்களும் உதவலாம் எனவும் தெரிவித்துள்ளது.

ஆர்வமுடைய நன்கொடையாளர்கள் பாசிக் நிறுவனம், இல.28, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனும், 021-222-1699 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம் என்று நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் மிட்சிக்கோ இஷிமோறி தெரிவித்துள்ளார். (வ-14)

# தென்னை மீள்நடுகைக்கு உதவிகள் வழங்கத் தயார்

### தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கம் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வடமாகாணத்தில் அழிவடைந்த தென்னந் தோட்டங்களின் மீள்நடுகைத் திட்டத்தை மேற்கொள்ள வசதியாக தோட்டங்களைத் துப்புரவு செய்வதற்கு பைக்கோ வாகனம், டிரக்டர்களை பெற்றுக் கொடுக்க இலங்கை தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கம் உதவி அளித்துள்ளது.



இந்திய அரசால் வழங்கப்பட்டு கமநல சேவைகள் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களை வடபிராந்திய தென்னம் தோட்ட உரிமையாளர் சங்கத்துக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு மேற்படி சங்கத்தினர் உறுதியளித்துள்ளனர்.

யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடபிராந்திய தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கூட்டத்தில் வடபிராந்திய தென்னம் தோட்ட உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் போர் வேளையில் அழிக்கப்பட்ட தென்னம் தோட்டங்களைத் துப்புரவு செய்யப்படாமல் உள்ளதாகவும், கடந்த 25 வருடங்களாக தோட்டங்களால் எந்தவொரு வருமானமும் இல்லாமல் உள்ளதால் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபா வீதம் நட்டஈடு பெற்றுத் தருமாறும்,

தோட்டங்களில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தை மேற்கொள்ள ஐந்து வருடங்களுக்கு வட்டியில்லாக் கடனாக ஏக்கருக்கு 75 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக அரசிடம் பேசி சாதகமான பதிலை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

வடபிராந்திய தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

## மாற்று ஆடை தயாரிப்புக்கு ஜப்பானிலிருந்து பணியாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 23
பழைய சேலைகளில் இருந்து மாற்று ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பயிற்சிகளைவழங்கஜெய்க்கா நிறுவனத்தின் தொண்டுப் பணியாளர்கள் இருவர் ஜப்பானில் இருந்து வருகை தந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பெண் தலைமைத்துவமான குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பாசிக் நிறுவனம் ஏற்கனவே 50 தையல் இயந்திரங்களை வழங்கியுள்ள நிலையில் அவர்களது தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக பழைய சேலைகளில் இருந்து மாற்று ஆடைகளைத் தயாரித்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதற்கானபயிற்சிகளைவழங்க ஜப்பான் நாட்டில் இருந்து ஜெய்க்கா நிறுவனத்தின் தொண்டுப் பணியாளர்களான மொத்தேக்கி, டையோஜி ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

அவர்களூடாக பயனாளிகளுக்கு உரிய பயிற்சிகளை வழங்க பாசிக் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாசிக் நிறுவனத்தால் ஆடைகளைத் தைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டு அதனூடாகப் பயனாளிகளுக்கு குறித்தளவு வருமானம் வழங்கப்படும்.

இதனூடாக பயனாளிகளிடம் இருந்து தைக்கப்பட்ட மாற்று ஆடைகளை வெளிநாடுகளுக்குஏற்றுமதிசெய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. (வ-14)


## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கங்களை விஸ்தரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.குடாநாட்டில் உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களை பிரதேச ரீதியாக விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவில் உருவாக்கப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான பதிவுச் சான்றிதழ் கடந்த வாரம் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் வைத்து யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் சம்பந்தப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.



**இதற்கான பதிவுச் சான்றிதழ் கடந்த வாரம் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் வைத்து யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தால் சம்பந்தப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.**

இந்தச் சங்கங்களைப் பிரதேச செயலாளர் பிரிவு ஊடாக மேலும் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமராட்சி, தீவுப் பகுதி, தென்மராட்சி, வலிகாமம் மேற்கு போன்ற பகுதிகளில் செய்கையாளர்களை உள்ளடக்கி சங்கங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (வ-17)

## மாணவரை கௌரவித்த உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.



உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவித்துள்ளது. தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகள் பெற்ற ச.தனுஷ்கா கௌரவிக்கப்பட்டார்.

சங்க எல்லைக்கு உட்பட்ட 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வாறு பாராட்டிக் கௌரவித்து பரிசில்களும் வழங்கப்பட்டன.

சங்கத்தின் தலைவர் கே.நாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (வ-17)

# தவிசாளரின் அனுபவப் பகிர்வு சுற்றுலா நேற்றுடன் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உப- தவிசாளர்கள், செயலாளர் மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் கலந்துகொண்ட 5 நாள் அனுபவப் பகிர்வு சுற்றுலா நேற்று முடிவடைந்து பயனாளிகள் யாழ்.திரும்பினர்.

நல்லாட்சி தத்துவங்களின் தலைவி சியானி விஜயசுந்தரத்தின் முயற்சியின் பலனாலும் யு.எஸ்.எயிட் நிறுவன நிதி பங்களிப்புடனும் மிகப் பயன் உறுதி வாய்ந்த தெற்கு சுற்றுலாவில் மிகச் சிறந்த செயலாற்றுகையைக்கொண்ட யக்கலமுல்ல பிரதேச சபை, அகலவத்தை பிரதேச சபை, பசறை பிரதேச சபை, நுவரெலியா மாநகர சபைகளின், சிறந்த நிர்வாக திட்டமிடல், பொதுச் சேவை, வாழ்வாதார சேவை மற்றும் சுகாதார திண்மக் கழிவு தொடர்பாக அறிந்து கொண்டதுடன் 15 இற்கும் மேற்பட்ட சுற்றுலா மையங்களைப் பார்வையிட்டு அறிந்து கொண்டனர்.

இதற்கான தொடர்பாடல் ஏற்பாடுகளை ஊவா சக்தி நிறுவன தலைவர் நடேசன் சுரேஷும் உள்ளூராட்சி நல்லாட்சி தத்துவ நிறுவன நிகழ்ச்சி திட்ட இணைப்பாளருமான சந்திரசேகரன் மணிமாறன், யு.எஸ்.எயிட் நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் எதிர்காலத்தில் தெற்கில் உள்ளூராட்சியின் கீழ் உள்ளஹோட்டல், திண்மக் கழிவு, சிறுவர் மேம்பாட்டு முயற்சிகள், உட்கட்டுமானங்கள், சுகாதார, ஆயுள்வேத, விவசாய பாற்பண்ணை மற்றும் கடல்சார்ந்த மேம்பாடுகளின் அபிவிருத்திகளை யாழ்.மாவட்டத்தில் மேம்பாடு செய்வோம் என பிரதேச சபைகளின் தவிசாளர், , உப - தவிசாளர்கள் உறுதியளித்துள்ளதுடன் 2014 இற்குள் சிறந்த செயற்பாடுகளை தெற்கில் உள்ள தவிசாளர்கள் பார்வையிடும் அளவுக்கு முன்னேறுவோம் எனவும் உறுதியளித்தனர். (வ-50)

# மீண்டும் ஊடுருவியது சீனா


புதுடில்லி, ஜூலை 23
இந்தியாவின் கிழக்கு லடாக் பகுதியில் சீன இராணுவம் மீண்டும் ஊடுருவியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 17 ஆம் திகதி சீன இராணுவத்தின் குதிரைப் படைப் பிரிவைச் சேர்ந்த சுமார் 50 படையினர் எல்லை தாண்டி இந்தியப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.
ஒரு நாளுக்கு மேலாக அந்தப் பகுதியில் தங்கியிருந்த சீன இராணுவத்தினர் பின்னர் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர். அத்துடன் அவர்கள் குறித்த பகுதி சீனாவுக்குச் சொந்தமானது என்றும் அங்கிருந்து அனைவரும் வெளியேறிவிட வேண்டும் என்றும் வலியுறுத்தும் பதாதைகளைக் கொண்டு வந்திருந்தனர் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
சீன இராணுவத்தினருக்கும் அந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையினருக்கும் இடையே சிறு மோதல் சம்பவம் இடம்பெற்றது. எனினும் உயிரிழப்புகள் எதுவும் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.
இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி சீனா சென்று எல்லைப் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்திய பின்னர் இந்த ஊடுருவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற)

## தமிழக மாநிலத்தில் வெள்ள எச்சரிக்கை

சென்னை, ஜூலை 23
இந்தியாவின் தமிழக மாநிலத்திலுள்ள கோதாவரி நதி பெருக்கெடுத்துள்ளதால் நூற்றுக்கும் அதிகமான கிராமங்களில் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நதியின் நீர்மட்டம் 52 அடியைத் தாண்டியுள்ளதுடன், மூன்றாவது ஆபத்து மட்டமான 53 அடியாக காணப்படுகின்றது.
இந்த நிலையில் வெள்ளம் ஏற்படக்கூடிய பகுதிகளிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தமிழகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
தாழ்நிலைப் பகுதிகளில் அமைந்துள்ள 111 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## உளவுத்துறை எச்சரிக்கை மும்பையில் கடும் பாதுகாப்பு

மும்பை, ஜூலை 23
தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற உளவுத்துறை எச்சரிக்கையை அடுத்து மும்பையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மக்கள் அதிமாகக் கூடும் வணிக வளாகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் ஆகிய இடங்களில் கண்காணிப்பை அதிகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
மக்கள் கூடும் இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வணிக வளாகங்களில் கடும் சோதனைக்கு பிறகே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். புத்தகயா குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு தீவிரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. அதையடுத்தே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
தீவிரவாதிகள் இந்தியாவின் முக்கிய விமானத் தளங்களைத் தாக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று உளவுத்துறை சில தினங்களுக்கு முன் தகவல் வெளியிட்டிருந்தது. (ற)



புதுடில்லியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் வெளியேறும் பாதை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைக் காணலாம்.

## இந்தியா வந்தடைந்தார் ஜோ பிடன்

புதுடில்லி, ஜூலை 23
அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடென் நேற்று இந்தியா வந்தடைந்தார். ஒரு வார காலம் தெற்காசிய பயணமாக வந்துள்ள அவரது வருகை மூலம் இரு நாட்டு உறவு வலுப்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டு கால வரலாற்றில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஆசிய பயணம் மேற்கொள்வது இதுவே முதன் முறை.
இந்தியா வந்துள்ள ஜோ பிடன் அங்கு பிரதமர் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்திக்க திட்டமிட்டுள்ளார். (ற)

# நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் திடீரெனக் கைது

விழுப்புரம், ஜூலை 23
தடையை மீறி விழுப்புரம் மாவட்டத்திற்குள் நுழைய முயன்ற நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் உட்பட 20 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
மறைந்த இயக்குநர் மணிவண்ணன் படத்தை விழுப்புரம் மாவட்டம், வானூர் அடுத்த ரங்கநாதபுரத்தில் திறந்து வைப்பதற்காக நேற்று மதியம் சீமான் வந்திருந்தார். விழுப்புரத்தில் தற்போது144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளதை மீறி விழுப்புரம் மாவட்டத்திற்கு சீமான் சென்றதால் முன் எச்சரிக்கையாக திண்டிவனம் அருகே திடீரெனப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அத்துடன் அவருடன் வந்த மேலும் 20 பேரும் கைது செய்யப்பட்டனர்.
சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட இளவரசன் உயிரிழந்ததை அடுத்து விழுப்புரத்தில் 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. (ற)

## சுஷ்மா சுவராஜ் சென்ற விமானத்தில் கோளாறு


### அவசரமாக ஜெய்ப்பூரில் தரையிறக்கம்

புதுடில்லி, ஜூலை 23
பா.ஜ.கவின் மூத்த தலைவரும் நாடாளுமன்ற எதிர்கட்சித்தலைவருமான சுஷ்மா ஸ்வராஜ் சென்ற விமானத்தில் திடீர் இயந்திர கோளாறு ஏற்பட்டு அவசரமாக தரையிறக்கப்பட்டது.
மத்தியபிரதேச மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தேர்தல் பிரச்சாரம் தொடங்க உள்ளார். அதற்கான யாத்திரை தொடக்கவிழா நேற்று நடைபெற இருந்தது. மத்திய பிரதேச விதிஷா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான சுஷ்மா ஸ்வராஜ் இந்த விழாவில் பங்கேற்க புதுடில்லியில் இருந்து விமானம் மூலம் உஜ்ஜயினிக்கு நேற்று காலை புறப்பட்டார்.
அவர் பயணம் மேற்கொண்ட விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்படவே விமானம் அவசரம் அவசரமாக ஜெய்ப்பூரில் தரையிறக்கப்பட்டது. பின்னர் வேறொரு விமானம் மூலம் தனதுபயணத்தைத் தொடர்ந்தார் சுஷ்மா
இதுகுறித்துக் டுவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள சுஸ்மா,
"காலையில் உஜ்ஜயினி புறப்பட்ட விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. விமானியின் சாமர்த்தியத்தால் ஜெய்பூரில் தரையிறங்கினோம். நான் இப்போது பாதுகாப்பாக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.(ற)

# டெசோ தீர்மானங்களை நிறைவேற்றக் கோரி டில்லி, தமிழகத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

### திராவிட முன்னேற்றக் கழகம் அறிவிப்பு

சென்னை, ஜூலை 23
"டெசோ" கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன என்று தி.மு.க. அறிவித்துள்ளது.



இது குறித்து தி.மு.க. தலைமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
"டெசோ" கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை கழக மக்களவை- மாநிலங்களவை உறுப்பினர்கள் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் புதுடில்லி, நாடாளுமன்ற வளாகத்தின் முன்பு நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.
அதேவேளை தமிழகம் எங்கும்நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்களில் பெருந்திரளானோர் கலந்துகொள்ளவுள்ளனர். சென்னை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. சென்னையில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்துகொள்வார். அத்துடன் கழகத்தின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் இந்தப் போராட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளனர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்–முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்க வேண்டும் என்று அழைக்கின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஊரடங்கு உத்தரவு காஷ்மீரில் நீக்கம்

சென்னை, ஜூலை 23
இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ள போதிலும் இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ள கடையடைப்பு போராட்டம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
ராம்பன் மாவட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப் படை முகாம் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.
அதில் 4 இளைஞர்கள் உயிரிழந்ததை அடுத்து பிரிவினை வாத அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ள கடையடைப்பு போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளநிலையில் பதற்றம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.(ற)

## நியூஸிலாந்தில் நிலநடுக்கம்; நாடாளுமன்ற கட்டடம் சேதம்

வெலிங்டன், ஜூலை 23
நியூஸிலாந்தில் ஏற்பட்ட நிலநடுக்கதால் வெலிங்டனிலுள்ள அந்தநாட்டு நாடாளுமன்ற கட்டடத் தொகுதி உட்படப் பல கட்டடங்கள் சேத மடைந்துள்ளன.
சுமார் ஒரு நிமிடம் வரை நீடித்த இந்த நிலநடுக்கத்தால் ரயில் சேவைகளும் தடைப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.
6.5 ரிச்டர் அளவில் உணரப்பட்ட நிலநடுக்கம் காரணமாகப் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதுடன் உட்கட்டமைப்புக்களும் சேத மடைந்துள்ளன.
2011 ஆம் ஆண்டில் நியூஸிலாந்தின் கிறைய்ஸ்சேர்ஸ் பகுதியில் ஏற்பட்ட 6.3 ரிச்டர் நில நடுக்கத்தில் 185 பேர் உயிரிழந்தனர். (ற)

## இடைவிடாத தாக்குதல்கள் சிரியாவில் 80 பேர் சாவு



டமாஸ்கஸ், ஜூலை 23
சிரியாவில் புரட்சியாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே இடம்பெற்று வரும் இடைவிடாத மோதல்களில் சிக்கி 80க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.
டமாஸ்கஸில் இரு தரப்பினரும் நேற்றுமுன்தினம் தொடக்கம் கடுமையான மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இருதரப்பினரும் சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன
இருதரப்புத் தாக்குதல்களிலும் சிக்கி 80க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவருகின்றது. அரிகா என்ற இடத்தில் நடந்த தாக்குதலில் 2 குழந்தைகள், இரண்டு பெண்கள் உட்பட பொதுமக்கள் 20 பேர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது. (ற)



பிரிட்டன் இளவரசர் வில்லியம்ஸின் மனைவி கேத் மிடில்டனுக்கு நேற்றுக் காலை பிரசவ வலி ஏற்பட்டதை அடுத்து அவர் மேற்கு லண்டனில் பட்டிங்டனில் உள்ள செயின்ட் மேரீஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பெரும்பாலும் இன்று பிறக்கவுள்ள பிரிட்டனின் புதிய வாரிசை வரவேற்பதற்காக வைத்தியசாலையின் முன்பாகப் பெருந்திரளானோர் கூடியுள்ளனர். (ற)

## ஜப்பானின் ஆளும் கட்சி அமோக வெற்றி

டோக்கியோ, ஜூலை 23
ஜப்பான் நாடாளுமன்றத்தின் மேல் சபைக்கான தேர்தலில் ஷின்சே அபே தலைமையிலான அந்த நாட்டு ஆளும் கட்சி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்கும் அவரின் முயற்சிக்கு இதன்மூலம் மக்கள் ஆணை வழங்கியுள்ளதுடன், 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜப்பானில் ஸ்திரமான அரசு அமையவுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற கீழ் சபைக்கான தேர்தலில் ஷின்சோ அபே தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சியின் கூட்டணி பெரும் வெற்றியைப் பெற்றிருந்தது. (ற)

# அதிர்ந்தது நிலம்

## 50க்கும் மேற்பட்டோர் சாவு; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம்




பீஜிங், ஜூலை 22
மத்திய சீனாவின் கன்சு மாகாணத்தில் உள்ள தியான்சூய்வில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 50க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சீன உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7.45 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.6 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் வசித்து வந்த மக்களின் தொகை 2.7 பில்லியன் என்பதால், ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்று சீன அதிகாரிகள் கூறுகின்றனர். முதலில் வெளியான தகவலில் 22 பேர் உயிரிழந்தனர் என்று கூறப்பட்டபோதும், அந்தத் தொகை 50க்கும் அதிகமானதாக இருக்கும் என்று தற்போது தெரிவிக்கப்படுகின்றது.
நிலநடுக்கத்தால் பெருந்தொகையான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன என்றும் மீட்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.
அதேவேளை, சீனாவின் போல்டிங்ஷி லாங்கன் மற்றும் லான்ஷோவ் பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது என்றும் சீன அதிகாரிகள் கூறுகின்றனர். (ற)

> “நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் வசித்து வந்த மக்களின் தொகை 2.7 பில்லியன் என்பதால், ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## தங்களது துணையை வேவு பார்க்கும் அமெரிக்கர்



நியூயோர்க், ஜூலை 23
அமெரிக்காவில் க்கணவன்-மனைவியோ அல்லது காதலன்-காதலியோ தங்களது துணையை அதிகப்படியாக வேவு பார்க்கின்றனர் என்று ஒப்புக் னடுள்ளனர்.
வலைத்தளம் ஒன்று நடத்திய ஆய்வறிக்கையில், 55 சதவீதமான அமெரிக்கர்கள் தங்களது ஜோடிகளை வேவு பார்ப்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். இவர்கள் தங்களது ஜோடிக்கு வரும் குறுஞ்செய்திகளை அவர்களுக்கு தெரியாமல் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.
ஆனால் அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் ஒன்றாக கருதப்படும் நியூயோர்க் நகரத்தில் 51 சதவீத மக்கள் தங்களை, அவர்களது இணை வேவு பார்ப்பதில்லை என்று கருத்து தெரிவித்துள்ளனர்.
இதேபோன்று அமெரிக்காவின் நம்பகத்தன்மையுடைய மக்கள் உள்ள நகரங்கள் குறித்து ஆய்வுசெய்யப்பட்டது. இதில், நியூயோர்க் நகரம் 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. புளோரிடா, ஜேக்ஸன்விலே ஆகிய நகரங்கள் முதலிடம் வகிக்கின்றன. இங்கு வசிக்கும் 55 சதவீத ஜோடிகள் தங்களது இணைகளை வேவு பார்ப்பதில்லை என்று தெரிவித்துள்ளனர்.
ரிக்கோமண்ட்வில் அதிகப்படியாக 68 சதவீத மக்கள் வேவு பார்ப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.
குறுஞ்செய்திகள், மின்னஞ்சல், முகநூல் மூலமாக தங்களது ஜோடிகளை வேவு பார்ப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.
குறிப்பாக ஆண்களை விட பெண்கள் தான் அதிகம் வேவு பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர். (ற)



**பெல்ஜியத்தின் புதிய மன்னர்**

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒன்றான பெல்ஜியத்தின் புதிய மன்னராக பிலிப் முடிசூடப்பட்டார்.
கடந்த 20 ஆண்டுகளான ஆட்சி செய்த மன்னர் இரண்டாம் அல்பேர்ட் (வயது-79) முதுமை காரணமாக ஆட்சிப் பொறுப்புக்கள் அனைத்தையும் தமது மகன் பிலிப்பிடம் ஒப்படைத்தார். பெல்ஜியத்தின் ,தேசிய தினமான நேற்றுமுன்தினம் இந்தப் பதவியேற்பு விழா நடைபெற்றது. (ற)

### பொஸ்டன் குண்டு வெடிப்புச் சம்பவம்

## பொய் கூறி நிவாரணம் பெற்ற பெண் மாட்டிக் கொண்டார் பொலிஸாரிடம்

நியூயோர்க், ஜூலை 23
அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நடைபெற்ற மரதன் போட்டியில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்டார் என்று கூறி நிதி மோசடி செய்த பெண் ஒருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.
அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற மரதன் போட்டியில் அடுத்தடுத்து தொடர்ச்சியாக 2 குண்டுகள் வெடித்தன.
இந்தக் குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். 260க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.
இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு 'ஒன் ஃபண்ட் பொஸ்டன்' என்ற தொண்டு நிறுவனம் நிதி சேகரித்து வழங்கியது. இதுவரை 6 கோடி அமெரிக்க டொலருக்கும் மேலாக சேகரிக்கப்பட்ட நிதி, பாதிக்கப்பட்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.
இந்த நிவாரண நிதிக்காக பொஸ்டன் குண்டு வெடிப்பில் சிக்கி, மூளைப் பகுதியில் காயமடைந்தார் என்று தெரிவித்து நியூயோர்க்கில் வசிக்கும் ஆண்ட்ரியா கவுஸ் (26) என்ற பெண்ணும் நிதிக்காக மனு செய்திருந்தார்.
அவரது மருத்துவ சான்றிதழ்களை ஆய்வுசெய்த தொண்டு நிறுவனம் 4 லட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அவருக்குவழங்கியது. எனினும் எப்போதோ ஏற்பட்ட பாதிப்பை பொஸ்டன் குண்டு வெடிப்பின் போது ஏற்பட்டதாக கூறி ஆண்ட்ரியா கவுஸ், போலி மருத்துவ சான்றிதழ்களின் மூலம் மோசடி செய்துள்ளதாக தொண்டு நிறுவன நிர்வாகிகளுக்கு தகவல் கிடைத்தது.
அதையடுத்து தொண்டு நிறுவனம் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து அந்தப் பெண்ணை கைது செய்துள்ள பொலிஸார் குறித்த பெண் பொஸ்டன் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளனர்.
தற்போது அந்தப் பெண் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்காக விண்ணப்பித்திருந்த அனைத்து மனுக்களும் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற)

## வாழைப்பழத்தின் விலையில் உயர்வு

குருநகர், ஜூலை 23
குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்துள்ளது. குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையிலுள்ள வாழைப்பழ விற்பனைக் கடைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 55 ரூபா முதல் 60 ரூபா வரையும், இதரை வாழைப்பழம் 65 ரூபாவில் இருந்து 70 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-51)

அண்ணா
உற்பத்திகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
"அண்ணா சுப்பர் சொப்"
K.K.S வீதி, இணுவில்.
அண்ணா உற்பத்திகளை
500/= ரூபாவுக்கு மேல் வாங்குபவர்களுக்கு
'1 பைக்கற் அண்ணா ஜீவாகாரம்'
1000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு
செய்பவர்களுக்கு
'1 பைக்கற் அண்ணா இடியப்ப மா'
(C/10581)(10,6,3)

## நல்லூரில் வாழும் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வாழும் கலை அமைப்பின் ஏற்பாட்டில் வாழ்க்கையை வளமாக்கும் வாழும் கலைப் பயிற்சியின் அடிப்படைப் பயிற்சியின் அறிமுக உரையும் பதிவு செய்தலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) மாலை 6 மணிக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி முதல் 1 மணி வரையும் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பயிற்சி வகுப்புகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-10)

## கர்ப்பிணியைத் தாக்கிய தாயும் மகளும்

தென்மராட்சி, ஜூலை 23
எட்டு மாதக் கர்ப்பிணியை வேலித்தடியை முறித்து தாக்கினர் தாயும் மகளும், இந்தச் சம்பவம் அண்மையில் கொடிகாமம் கோயிலாமனையில் இடம்பெற்றது.
தாக்குதலுக்கு இலக்கான பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.இதனையடுத்து பொலிஸார் தாயையும் மகளையும் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் இரண்டு பெண்களையும் தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். (ஒ-9)

## கல்வியங்காட்டில் வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
கல்வியங்காடு ஜே/112, ஜே/113 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கலைமகள் வீதி, புலவனார் வீதி, தேவாலய வீதி, பூதவராயர் வீதிகள் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ச.சுரேஸ்குமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ஒ-7)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த
Koyo
Value & Technology MADE IN JAPAN
KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன்
ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

## இளம் பெண் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 23
கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் இளம் பெண்ணொருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.
சடலமாக மீட்கப்பட்டவர் உதயநகர் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு சர்மினி (வயது- 29) என்பவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்று பிற்பகல் குறித்த பெண் தூக்கிட்டுக் கொண்டதாக அவரது தாயார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இதன்படி சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.
சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் ,பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-6)

## பிறந்தநாள் வாழ்த்து



கனகசபாபதி சஞ்ஜீவன்
27ஆவது பிறந்த நாளையும்
கனகசபாபதி சஞ்ஜீனோஸா
21ஆவது பிறந்தநாளையும்
இன்று (23.07.2013)
தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் இருவரும் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் துணை கொண்டு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



சண்டிலிப்பாய்,
வைரவர் கோயிலடி,
சண்டிலிப்பாய்.
வாழ்த்துபவர்கள்: அம்மா, அப்பா, சகோதரர்கள் (ஜீக்கா, ஜீவிஷன்)
077 262 3745, 077 761 1399
(31140)(3.5.6)

உழவு இயந்திரம் விற்பனைக்கு
TAFE - 45 D1, No. RD- x x x x
இலக்கம் கொண்டதும், லீசிங்கில் உள்ளதுமான உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 130 4789

விற்பனைக்கு
தேர் வடக் கயிறு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 321 2763,
077 711 8493

## சமுதாய மேம்பாட்டில் பால்நிலை மற்றும் பங்கேற்பு புலமைப்பரிசில் பயிற்சிநெறித் திட்டம் - 2013

நல்லாட்சியினை நோக்காகக் கொண்டு இயங்கும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையமானது சமூகத்திற்கும், சமூகப்பணியிலீடுபடுவோருக்குமிடையிலான இடைவினையிலுள்ள இடைவெளியினைச் சாத்தியமான வகையில் நிரவும்பொருட்டு, **'சமுதாய மேம்பாட்டில் பால்நிலை மற்றும் பங்கேற்பு'** தொடர்பானதொரு செயற்பாட்டு அடிப்படையிலான குறுகிய காலப் பயிற்சிநெறியினை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது. ஆர்வமும் ஆற்றலுங் கொண்ட சமூகமட்ட அமைப்புக்களில் அங்கத்துவம் வகிப்போரையும், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் தொடர்புடைய உயர்கற்கை நெறிகளில் ஈடுபடும் மாணவர்களையும் நாம் இதில் பங்குபற்ற அழைக்கின்றோம்.

சமுதாயப் பணிகளில் ஈடுபடும் சமுதாயத் தலைவர்கள், மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் தமது பணிகளில் மேலும் தம்மை இணைத்துக் கொள்வதற்குரிய அறிவை ஆழப்படுத்தி, வருங்காலத்தில் தமது பணியில் சமூகநீதியுடன் செயற்படுவதற்கான தகைமையினையும் இப்பயிற்சிநெறி அளிக்கும். சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்புச் செயன்முறைகளின்வழி பொறுப்புக் கூறல், பால்நிலை, நீதி, சமத்துவம் என இன்னோரன்ன அணுகுமுறையுடன் விடயங்களை அணுகுதல், பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்பாடல்களினை மேம்படுத்தல் போன்றவற்றுக்கான முறையியற் பயிற்சியினையும் இப்பயிற்சி அடிப்படையாகக் கொண்டுள்ளது. எண்ணக்கருக்கள் கோட்பாட்டு ரீதியிலான விளக்கங்களினைப் பெறல், பிரயோக அறிவினைப் பரீட்சிப்பதற்கான பிரதேசங்களுக்கிடையிலான களவிஜயங்கள் மற்றும் இதர நாடுகளில் பணிபுரியும் பால்நிலை மற்றும் சமூகப்பணி சார்ந்த நிபுணர்களுடனான சந்திப்புக்கள் என்ற அடிப்படையில் இப் பயிற்சிநெறி அமையும். திட்டமுன்மொழிவுகள் தயாரித்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான சுட்டிகள் தயாரித்தல், அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பணங்களை வழங்குதல் போன்றவற்றிலும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

பயிற்சிநெறியின்போது கட்டாயமாகக் களப்பணிசார்ந்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்குப் பயிலுநர்கள் வேண்டப்படுவர். சமூகமட்ட அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கும் பயிலுநர்களுக்கான பயிற்சிகள் தனியாகவும், ஏனையோருக்கான பயிற்சிகள் தனியாகவும் இடம்பெறும். இருபத்தைந்து விண்ணப்பதாரிகள் மட்டும் ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படுவதுடன் அவர்கள் முழுமையாகப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவார்கள். பயிற்சிநெறியானது ஆவணி மற்றும் புரட்டாதி மாதங்களின் வார இறுதி நாள்கள் மற்றும் அரசவிடுமுறை தினங்களில் நடைபெறும். தேவைப்படுமிடத்து நான்கு நாள்கள் கொண்ட வதிவிடப் பயிற்சியும் வெளிமாவட்டத்தில் நடத்தப்படலாம். உங்கள் கல்வித் தகுதி, பணி மற்றும் இதர விவரங்கள் அடங்கிய சுயவிவரக்கோவையினைத் தயாரித்து அனுப்ப வேண்டும்.

**வயதெல்லை:** 24-45 வயதுக்குட்பட்ட ஆண் - பெண் இருபாலாரும்.
**விண்ணப்ப முடிவுதிகதி:** 30.07.2013

**அனுப்பவேண்டிய முகவரி:** நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், விழுது, இல 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
**ஈமெயில்:** info@viluthu.org
**மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்:** 0212229866/0112506272

VILUTHU
**Viluthu**
**No 3, Torrington Avenue**
**Colombo - 07.**
(31146)(2.6.3)

## சேவை நலன் பாராட்டு



Best Wishes Best Wishes

**திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்**
**(வித்தியாலய முதல்வர்)**
**யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை வரணி**
**திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் அவர்கள் யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி 29.07.2013 ஆம் திகதி ஓய்வுபெறுகின்றார்.**
**" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவ தென்பது இழுக்கு"**
**என்ற திருக்குறளுக்கமைய தனது சுய முயற்சியினால் படித்து பட்டமும் பெற்று ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். சமய சமூகப்பணிகளிலும் ஈடுபாடுடைய இவர் மந்துவில் புளியந்திடல் கந்தசாமி கோயில் மீது பக்தியும் பற்றும் உள்ளவர். இதன் காரணமாக 1978 ஆம் ஆண்டு தொடக்கம் இக்கோயிலின் பரிபாலன சபையில் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்து கோயிலின் திருப்பணிவேலைகள், மாதாந்த பூசைகள், விசேட பூசைகள் போன்றவற்றை ஒழுங்குமுறையாகவும், சிறப்பாகவும் செய்வதற்கு உரிய திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதில் முன்னின்று செயலாற்றிக் கொண்டிருப்பவர். இவரது கல்வி, சமய, சமூக பணிகளைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் சீரும் சிறப்பும் பெறவும் அவரது நற்பணிகள் தொடரவும் மந்துவில் புளியந்திடலில் கோயில் கொண்டிருக்கும் கந்தசாமியாரைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.**
**பரிபாலனசபை மந்துவில் புளியந்திடல் கந்தசாமி கோயில்.**

**ஆசிச் செய்தி**
மந்துவில் புளியந்திடல் கந்தசாமிகோயில் பரிபாலனசபை உறுப்பினரும் யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபரும் ஆகிய
**உயர் திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் அவர்கள்**
**சேவையிலிருந்து ஓய்வுபெறுவதனால் எல்லாம் வல்ல மந்துவில் புளியந்திடல் கந்தசாமிகோயில் கந்தன் அருளால் நீண்ட ஆயுளுடனும், சிறப்புடனும் வாழ வாழ்த்தி எனது குரு ஆசியையும் வழங்குகின்றேன்.**
**வீரசைவ சந்திர சிவஸ்ரீ சிவனேச குருக்கள்**
**ஆலய குரு, மந்துவில் புளியந்திடல் கந்தசாமி கோயில்.**
(அ.10598 (45.6.3)

## விபத்துச் சம்பவம்

தென்மராட்சி, ஜூலை 23
வீதியைக் கடந்த மாணவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.
இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மீசாலை சந்தியில் இடம்பெற்றது.
தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய மாணவனே மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தவராவார்.
மீசாலை மேற்கைச் சேர்ந்த மணிவண்ணன் கவிதரன் (வயது-8) என்னும் மாணவன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
மீசாலைச் சந்தியில் கடமையிலிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளோட்டியை கைது செய்துள்ளனர். மோட்டார் சைக்கிளோட்டியான மீசாலை கிழக்கைச் சேர்ந்த வீ. கணேசலிங்கம் (வயது-54) என்பவரும் சம்பவத்தில் காயமடைந்ததால் பொலிஸார் அவரை சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். (ஒ-9)

## 'பெருங்குடி மக்கள்' அட்டகாசம்

பருத்தித்துறை, ஜூலை 23
பருத்தித்துறை கிராமக்கோடு சுவில் ஒழுங்கையில் மது அருந்துவதற்காக வரும் மதுப்பிரியர்கள் பொதுமக்களுக்கு பெரும் சிரமங்களைக் கொடுத்து வருகின்றனர். அந்த இடத்தில் மது அருந்தும் சில மதுப்பிரியர்கள், குடித்து முடித்த மதுப் போத்தல்களை ஒழுங்கையில் உடைத்தும் அந்த வழியால் செல்லும் பெரியவர்கள், தனியார் கல்வி நிலையம் முடித்து வீடு திரும்பும் பெண் பிள்ளைகளுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். தட்டிக் கேட்கும் முதியவர்களுடன் பெருங்குடிகள் கைகலப்பில் ஈடுபட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. (ஒ-34)

# வடக்கு, கிழக்கில் 10 மத்தியஸ்தர் சபைகள் அமைக்க வேண்டும்

## சபையின் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கரவெட்டி, ஜூலை 22
இலங்கையில் ஏறக்குறைய 319 மத்தியஸ்தர் சபைகள் உள்ளன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் மேலும் 10 மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்பட வேண்டியுள்ளதாக மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஹெக்டர் எஸ்.யாப்பா தெரிவித்தார்.

மத்தியஸ்தர் தினம் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஹெக்டர் எஸ்.யாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
நீதிமன்றத்தில் வழக்கொன்றை நாம் தாக்கல் செய்வதன் மூலம் இறுதி தீர்ப்பு வெற்றி அல்லது தோல்வியிலேயே முடியும். இது ஒரு தொடர் தீர்வாக அமையமாட்டாது. ஆனால் நாம் மத்தியஸ்தர் சபையில் ஒரு வழக்கை கொடுப்பதன் மூலம் இறுதியாக வெற்றி - வெற்றி என்ற முடிவுக்கே வழக்காளியும் எதிர் வழக்காளியும் வருகின்றனர். எனவே இதுவே சிறந்த தீர்வாக அமைகின்றது.

பெரும்பாலும் 50 வீதமான பிணக்குகளுக்கு சாதக மான தீர்வுகள் எட்டப்படுகின்றன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் மேலும் 10 மத்தியஸ்தர் சபையினர் அமைக்கப்பட வேண்டியுள்ளது- என்றார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றும் போது:
வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மீள்குடியமர்வு தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விசேட மத்தியஸ்தர் சபைகள் வடக்கு, கிழக்கில் அமைக்கப்படவுள்ளதாகவும், அதன் உறுப்பினர்களாக ஏற்கனவே உள்ள உறுப்பினர்களிலிருந்து தேர்ச்சியும், திறமையுமுள்ள உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் இவை தொடர்பான செயற்றிட்ட ஆக்கம் ஆராயப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்துப் பணம் போதாதென்பதும் தெரிந்த விடயமாயினும் இவர்கள் பொது மக்களுக்கு ஆற்றி வரும் சேவை போற்றுதற்குரியதாகும்.

இது ஒரு தொழிலாக அல்லாது தொண்டர் சேவையாக, சமூக சேவையாகவே கருதப்படுகின்றது. இந்தச் சபையானது மக்களது நன்மதிப்பையும், நம்பகத்தன்மையையும் பெற்றுள்ளது.

இந்தச் சபையில் தொடர்ந்து 10 வருடங்கள் கடமையாற்றும் உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் எனும் பதவியும் வழங்கப்பட்டு வருகின்றது - என்றார். (எ-35)

## மாதகல் சம்புநாதீஸ்வரத்தில் அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 23
மாதகல் சம்புநாதீஸ்வரம் ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை நேற்று முன்தினம் அங்குராப்பணம் சிவதொண்டன் நிலையத்தால் செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் கடந்த ஆண்டு முதல் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நெருக்கடிகளுக்குள் உள்ளாகிய நிலையில் வாழ்ந்து வரும் இந்த மக்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் சிறார்களின் ஆன்மிக சமய கல்வியை வளர்த் தெடுக்கும் முகமாகவும் சிவ தொண்டன் நிலையத்தால் இந்த அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சமயக் கல்வி போதிக்கப்படுகிறது. (வ-86)

# வலி.கிழக்கு பிரதேசத்தில் மீண்டும் நடமாடும் சேவை

அச்சுவேலி, ஜூலை 23
வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

நடமாடும் சேவையின் அவசியம் தொடர்பாக பொது ஸ்தாபனங்கள் வலியுறுத்தி வருவதை அடுத்து நடமாடும் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

> 'பவ்ரல்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த மாதம் மூன்று தினங்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன.

'பவ்ரல்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த மாதம் மூன்று தினங்கள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன. அதிலும் பொருத்தமான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத நூற்றுக்கணக்கானோர் இருப்பதால் அவர்கள் அடையாள அட்டையைப் பெறுவதற்கு ஏதுவாக தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

நடமாடும் சேவை தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தகவல் தெரிவிக்கையில்:
கடந்த மாதம் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் ஆள் பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படுகின்றன. முதற்கட்டமாக 28 அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை கிராம அலுவலர்கள் ஊடாக விண்ணப்பதாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கில் மேலும் பலர் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கத் தயாராக உள்ளதால் நடமாடும் சேவையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது- என்றார்.- (வ-11)

### மடுமாதா உற்சவ காலத்தில்

## பனை உற்பத்தி பொருள்களை காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூலை 23
மன்னார் மடுமாதா உற்சவ காலத்தில் பனைசார் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்துவும் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவும் பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பனை சார் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறுகுழுக்கள் திட்டத்தின் ஊடாக தொழில் சார் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் பனை சார் உற்பத்தியாளர்களின் தொழில் மேம்பாட்டுக்கென 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ள நிலையில் மன்னார் மடுமாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் பனை அபிவிருத்திச் சபையூடாக கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடம் ஒன்றை அமைத்து உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை வழங்கவுள்ளது.

இந்த நிலையில் அடுத்த மாதம் உற்பத்தியாளர்களுக்கு தொழில்துறை உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மன்னார் மடுமாதா உற்சவ காலத்தைப் பயன்படுத்தி பனம் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதுடன் உற்பத்தியாளர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக திருவிழாக் காலத்தில் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து அதிகளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தரும் நிலையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களில் பனை சார் உற்பத்திப் பொருள்கள் அதிக கிராக்கி உடையதாக காணப்படும் நிலையில் ஆலயச் சூழலில் கூடுதல் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் எதிர்பாக்கப்படுகிறது.

இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபை அதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. (வ-14)

## களுத்துறை மக்களின் நிதியில் இயக்கச்சி வாசிகளுக்கு உதவி

பளை, ஜூலை 23
வடக்கு மற்றும் தெற்கு உறவுப் பாலத்தின் ஒரு நிகழ்வாக களுத்துறை மாவட்ட ஹொறணை பிரதேச மக்களின் நிதிப் பங்களிப்பில் பளை, இயக்கச்சி பிரதேச வாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள், சைக்கிள்கள், தையல் இயந்திரம் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இயக்கச்சி தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்கவின் அனுசரணையுடன் ஹொறணை பிரதேச தனவந்தர்களின் நிதிப் பங்களிப்புடன் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் பார்வைக்குறைபாடு களுடைய பிரதேசவாசிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (வ-122)

## சண்டிலிப்பாயில் இடம்பெற்ற பொலிஸாரின் நடமாடும் சேவை

நவாலி, ஜூலை 23
மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் முதியோர் சங்கக் கட்டடத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம்பேத் தலைமையில் நடைபெற்றது. அதிகமானோர் இதில் கலந்து கொண்டு அடையாள அட்டை முறைப்பாட்டுப் பிரதிகள் உட்படப் பல உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது முதியோர்களை எவ்வாறு பராமரிக்க வேண்டுமென்று குறித்து பொலிஸ் அதிகாரிகளால் பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளால் முதியோர்களுக்கு நெஸ்டமோல்ட் பைக்கற்றுகள் வழங்கப்பட்டன. (வ-100)


## சாதனை புரிந்த மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 23
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வலைப்பந்தாட்ட சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், 2013 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வும் கடந்த 20 ஆம் திகதி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் சி.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே கடந்த மாதம் வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்களுக்கான 17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தகுதிபெற்ற வலைப்பந்தாட்ட அணியினர் கௌரவிக்கப்பட்டதுடன் இந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஆசிவழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபர் ச.அம்மையப்பர், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி ஆகியோர் உட்படபழைய மாணவர்களும், பெற்றோரும் கலந்துகொண்டனர். (வ-23)



சின்னக்கதிர்காமம் என்று அழைக்கப்படும் தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெற உள்ளது.
அதில் கலந்து கொள்வதற்காக அம்பாறை பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் பாத யாத்திரையாகச் செல்கின்றனர். (ச-31)

# ‘13’ ஐ ஆதரித்து இன்று பிரேரணை

## கிழக்கு மாகாணசபையில் சமர்ப்பிக்கிறது மு.கா.

எருவில்,ஜூலை 23

அரசமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எதிர்த்தும், ‘13’ ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தும் இன்று செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாணசபை அமர்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்தத் தகவலை கட்சியின் கிழக்கு மாகாண சபைக் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசமைப்பில் இருந்து நீக்கி விடுவதற்கோ அதன் அதிகார வலுவை குறைப்பதற்கோ முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் இணங்க மாட்டாது.

நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்குத் தேவையான அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளக் கூடியதும் சமூக ரீதியான காப்பீடுகளை தரவல்லதுமான அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு பேரினவாத சக்திகள் குரல் எழுப்புகின்றன. அதற்கான நகர்வுகளை முன்னெடுத்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில் அவற்றை முறியடிப்பதற்காக எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதன் தலைமைத்துவமும் உறுதியான நிலைப்பாட்டுடன் செயலாற்றி வருகின்றன.



> ‘13’ ஆவது திருத்த சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான பிரேரணைகள் சில மாகாண சபைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதற்கான பிரேரணைகள் சில மாகாண சபைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண சபையிலும் அவ்வாறான பிரேரணை ஒன்று கொண்டு வரப்படலாம்.

அதன்போது முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களித்து பிரேரணையை தோற்கடிக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண சபையில் இன்று செவ்வாய்க்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தனி நபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளேன்.-என்றார். (ச-31)

## துப்பாக்கிகள் மீட்கப்பட்டன

அம்பாறை,ஜூலை 23

அம்பாறை,அக்கரைப்பற்று நகரப் பகுதியிலுள்ள கடையொன்றின் பின்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த இடத்துக்குச் சென்று 2 உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை மீட்டுள்ளனர்.

இந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் மரப்பலகைகளுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் கூறினர். (ச)



## மாமாங்கேஸ்வரருக்கு திருவிழா; ஆலய வளாகத்தில் சிரமதானம்



மட்டக்களப்பு,ஜூலை 23

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகரசபை சிரமதான பணியை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையால் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சிரமதான பணியில் மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர் கள்; பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளை சுத்தம் செய்தனர்.(ச)

## அதிகளவில் பிடிபடும் சூரை மீன்கள்



மட்டக்களப்பு,ஜூலை 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களில் 20,000 கிலோ சூரை மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி மற்றும் களுவன்கேணி; ஏறாவூர் பிரதேசங்களுக்குட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

கடலின் கரையோர பிரதேசங்களில் சிறிய ரக மங்கு மீன்கள் அதிகளவில் காணப்படுவதால், அதனை உண்ணுவதற்காக வரும் சூரை மீன்களே வலைகளில் அதிகளவு சிக்குகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

## கல்அமுனவில் அணைக்கட்டு அமைக்க ஏற்பாடு

அம்பாறை,ஜூலை 23

அம்பாறை, லகுகல பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்அமுன பிரதேசத்தில் விவசாய நீர்ப்பாசன அணைக்கட்டு அமைப்பதற்கான அங்குரார்ப்பண வேலை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நீர்ப்பாசனம் மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அணைக்கட்டு ‘மஹிந்த சிந்தனை’ வேலைத்திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. (ச)

# சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் மாணவர் உரிமை இழக்க நேரிடும்

## எச்சரிக்கிறார் இஸ்மாயில்



அம்பாறை,ஜூலை 23

பல்கலைக்கழகங்களில் சரிவர சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் சில வேளைகளில் மாணவர்கள் உரிமையை கூட இழக்க நேரிடும். அல்லது பல்கலைக்கழகத்தில் படிக்க முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறு தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.எம்.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்

2012 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற 25 தமிழ், முஸ்லிம் மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை நால்வர் கோட்டம் தாமரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தின் சொத்துக்களாக மாணவர்கள் இருக்கின்றனர். மாணவர்களால் சமூகத்தில் பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தமுடியும்.

மாணவர்கள் வீதிக்குச் சென்று போராட்டம் நடத்துகின்றனர்; பல்கலைக்கழகத்துக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்; தேவையற்ற குழப்பங்களை பல்கலைக்கழகத்தில் உருவாக்குகின்றனர்; இவற்றையெல்லாம் பெற்றோர்கள் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

ஏனெனில் தற்போது நாட்டில் பல்வேறுபட்ட சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாணவர்களை சிறந்த வழியில் நடத்துவதற்கும் பல்கலைக்கழகங்களை இலகுவாக நடத்துவதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கல்முனை வடக்குக்கென தனியான பிரதேச செயலகம் ஏன் இருக்கக்கூடாது?

## அமிர்தலிங்கம் கேள்வி

கல்முனை,ஜூலை 23

கல்முனை வடக்குக்கென்று தனியான வைத்தியசாலை, கூட்டுறவுச்சங்கம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இருக்கும்போது, ஏன் கல்முனை வடக்குக்கென்று தனியான பிரதேச செயலகம் இருக்கக்கூடாது.

இவ்வாறு கல்முனை மாநகரசபையின் எதிரணித் தலைவர் எஸ்.அமிர்தலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

1989ஆம் ஆண்டு டபிள்யு. கே.தேவநாயகம் காலத்தில் இருந்தே கல்முனை வடக்குக்கென்று தனியான பிரதேசசெயலகம் உருவாக்கவேண்டும் என்று அப்போதைய அரசால் முன்மொழியப்பட்ட ஒரு விடயம்.

ஆனால் அது இதுவரை காலமும் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே கிடக்கின்றது. இதற்குக் காரணமானவர்கள் அரசில் அமைச்சுப்பொறுப்புக்களில் உள்ளவர்களும், அந்த அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களுமே இதற்கான முழுப்பொறுப்புக்களையும் கொண்டவர்களாக இருக்கின்றனர்.-என்றார். (ச)

## தேர்தலுக்கு அமைச்சர்கள் வரவேற்பு



கொழும்பு,ஜூலை 23
அரசின் பெரும்பாலான அமைச்சர்கள் வடமாகாண சபைத் தேர்தலை வரவேற்றிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் 13ஆம் திருத்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு உத்தேசித்திருந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

### பொதுநலவாய உச்சிமாநாடு:

# 53 நாடுகளுக்கும் அழைப்பிதழ் கையளிப்பார் ஜனாதிபதியின் பிரதிநிதி

கொழும்பு,ஜூலை 23
பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் விசேட பிரதிநிதி இதற்கான அழைப்பிதழ்களை 53 அங்கத்துவ நாடுகளுக்கும் கையளிக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டு அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள 53 நாடுகளும் பங்குபற்றவுள்ளன.

> அனைத்து நாடுகளும் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளன .

இந்த நாடுகள் அனைத்துக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதி நேரில் சென்று முறைப்படி பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை கையளிப்பார்.
உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள சர்வதேச நாடுகளுக்கான அழைப்பிதழ்களை தயாரிக்கும் மற்றும் வடிவமைக்கும் பணிகளில் பொதுநலவாய செயலணி ஈடுபட்டு வருகின்றது.
53 நாடுகளுக்கும் அழைப்பிதழ்களை எடுத்துச் செல்லும் ஜனாதிபதியின் பிரதிநிதி தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது.

CHOGM 2013
Sri Lanka
நவம்பர் 15 - 17

கொழும்பிலிருந்து ஜனாதிபதி பிரதிநிதிகள் அழைப்பிதழ்களுடன் அதிகமான நாடுகளுக்குச் செல்லவுள்ள நிலையில், சில நாடுகளில் உள்ள இலங்கைத் தூதர்கள் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதிகளாகச் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களை நேரில் சந்தித்து அழைப்பிதழ்களை கையளிப்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.
எனினும் பொது நலவாய அமைப்பின் உறுப்புரிமை பெற்ற அனைத்து நாடுகளுக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதி நேரில் சென்று அழைப்பிதழை வழங்கவுள்ளார்.
அனைத்து நாடுகளும் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளன .-என்றார். (ச)



இலங்கையில் பிரசித்திபெற்ற களனி விகாரையில் பௌர்ணமி தினங்களில் பல்லாயிரக்கணக்கானோர் வழிபாடுகளில் ஈடுபடுவது வழமையாகும். ஆடி மாத பௌர்ணமி தினமான நேற்று திங்கட்கிழமை அதிகாலை வழிபாடுகளில் ஈடுபடுவதற்குக் கூடிய பக்தர்களைக் காணலாம். (ச)

# இலத்திரனியல் பொருள்களுக்கு வருகிறது புதிய கட்டுப்பாடுகள்

கொழும்பு,ஜூலை 23
வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்ட கணினிகள் மற்றும் கைத்தொலைபேசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு சுற்றாடல் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் இலத்திரனியல் பொருள்களை நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஐவர் கொண்ட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது.
அந்தக் குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்காலத்தில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்தார். (ச)

## அதிகளவான கர்ப்பிணிகளுக்கு சத்திரசிகிச்சை

கொழும்பு,ஜூலை 23
இலங்கையில் தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் அதிகளவான கர்ப்பிணிகளுக்கு சிசேரியன் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
அநேகமாக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகள் சிசேரியன் முறையிலேயே குழந்தை பிரசவிக்கின்றனர்.
ஆபத்து ஏற்படக் கூடுமெனத் தெரிவித்து மருத்துவர்கள் சிசேரியன் சத்திர சிகிச்சை மேற்கொள்கின்றனர்.
இவ்வாறு சிசேரியன் சத்திரகிச்சைக்கு ஒரு லட்சம் ரூபா வரை செலவாகின்றது.
சில தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் பிரசவ வைத்தியர்கள் சிசேரியன் சிகிச்சைகளை மட்டுமே மேற்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# வேட்பு மனு பணிகள் 27, 28 இல் பூர்த்தி

### அமைச்சர் சுசில் தகவல்



கொழும்பு,ஜூலை 23
வட மேல், மத்திய, வட மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 27ஆம், 28 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நேர்முகப் பரீட்சை பூர்த்தியாகியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் அட்டவணை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
இதேவேளை, சுயாதீன மற்றும் கட்சி வேட்பாளர்கள் தாங்கள் தாக்கல் செய்யும் வேட்பு மனுக்களை மிகவும் திருத்தமான முறையில் முன்வைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
வேட்பாளர் ஒருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் கட்சிகள் தமது வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை முழுமையாகச் செலுத்த வேண்டு என்று அவர் கூறினார்.

# போர் அனுபவங்களை ஏனைய நாடுகள் இலங்கையிடம் கற்றுக் கொள்ளலாம்

### இப்படி 'அறிவுரை' கூறுகிறார் ரவிநாத் ஆரியசிங்க

கொழும்பு,ஜூலை 23
போர் அனுபவங்களை இலங்கையிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்று ஜெனிவா ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகளுக்கான பொருளாதார மற்றும் சமூக சபை அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மூன்று தசாப்தகால பிரிவினை வாத செயற்பாடுகளை எதிர்கொண்ட இலங்கை 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலைக்கும் முகம்கொடுத்தது.
போர் சூழ்நிலைகளின் போது இலங்கை பெற்ற அனுபவங்களை ஏனைய நாடுகள் பயனுள்ள விடயங்களாகக் கருதவேண்டும்.
போர் நிறைவடைந்த பின்னர் நிலக்கண்ணி வெடிகளை அகற்றல், இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் அவர்களின் வாழ்வாதார மேம்பாடுகளை முன்னெடுத்தல் போன்றவைகளை இலங்கை முனைப்புடன் மேற்கொண்டுள்ளன.
இயற்கை இடர்களை எதிர்கொள்ளவும் இலங்கை தயாராகவுள்ளது.
இடர்களின் போது பொது மக்களை துரிதமாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளும் தற்போது தயார்படுத்தப்பட்டுள்ளன.
ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு போன்ற அமைப்புகள் இலங்கையில் தமது நடவடிக்கைகளை குறைத்துக் கொண்டுள்ளமை மனிதாபிமான செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது.
-என்றார். (ச)



> போர் சூழ் நிலைகளின் போது இலங்கை பெற்றஅனுபவங்களை ஏனைய நாடுகள் பயனுள்ள விடயங்களாகக் கருத வேண்டும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கறுப்பு ஜூலையின் தொடக்கத்தை தொடரியாக்கும் போக்கு வேண்டாமே

ஆடிக் கலவரம் என்று மேலார்ந்த ரீதியாகக் குறிக்கப்படும், தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு அத்தியாயத்தின் உச்சக் கட்டம் இந்த நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட முப்பதாவது ஆண்டு இன்றாகும்.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட கையோடு ஆரம்பிக்கப்பட்ட தமிழின அழிப்பும், இன ஒடுக்குதலும் ஓய்ந்துவிடும் அல்லது நிலைமை சீராக்கப்படும், முழு அளவில் நீங்கிவிடும் என்று கற்பனை தானும் செய்ய முடியாத பின்னூட்டலே இதுவரையும், இப்போதும் மேலெழுந்து வருகிறது. இது எல்லா வகைகளிலும், வழிகளிலும் இருள் மண்டுகிறது என்றே கருதலாம்.

பல்லின மக்கள் வாழும் நாடுகள் பலவற்றிலும், அங்கு வாழும் மிகக் குறைந்த எண்ணிக்கையான சிறுபான்மை இனங்கள் தமது மொழி, மதம், பண்பாடு போன்றவற்றை முறையே பயன்படுத்தவும், பின்பற்றவும் சட்டரீதியாக முழு அளவில் வசதியும் வாய்ப்பும் வழங்கப்படுகின்றன.

ஆனால் நமது நாட்டில் முற்றிலும் மாறான நிலைப்பாடே தொடர்கிறது. ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள் காலத்துக்குக் காலம் மாறினாலும், சிறுபான்மை இன மக்களை ஒடுக்குவதிலும் துவேசிப்பதிலும் அதீத போக்கே தொடர்கிறது.

கடந்த 30 ஆண்டுகால இலங்கையின் வரலாறு பேரழிவுகள் உள்ள இருள்சூழ்ந்த அத்தியாயத்தைக் கொண்டிருப்பது கவலைக்குரியதே.

2009 போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கழிந்தும், இலங்கையில் இன மோதல்களுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் மிகவும் அரிதாகவே காணப்படுவது, இந்த நாட்டின் சாபக்கேடாகும். இலங்கையில் வைக்கப்பட்ட அனவாதத் தீயை அணைப்பதற்கு ராஜபக்ஷ அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் போதிலும் நல்லிணக்கத்துக்கு ஆப்பு வைக்கும் இனவாதிகளின் கைதான் அரசில் ஓங்கி வருகிறது.

சுமார் 3,000 தமிழ் மக்களின் உயிர்களைப் பலியெடுத்த, தமிழர்களின் ஆயிரக்கணக்கான வீடுகள், வர்த்தக நிலையங்களை அழித்த, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைச் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றிய, தமிழ்ப் பெண்களின் கற்பை அழித்த கறுப்பு ஜூலைச் சம்பவங்கள் உண்மையில் ஓர் இனக்கலவரம் அல்ல.

இரு இனங்கள் மோதுவதுதான் இனக்கலவரம். ஆனால், ஓர் இனம் மற்றொரு இனம் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்துவதையும், வீடுவாசல்களை இழந்து உயிரிழப்புகளைச் சந்தித்து அவர்கள் தப்பி ஓடுவதையும் இனக்கலவரம் என்று கூறமுடியாது. இது உண்மையில் பொஸ்னியாவில் இடம் பெற்றது போன்ற ஓர் இனச் சுத்திகரிப்பே.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் விடுதலைப் புலிகள் நடத்திய முதலாவது கரந்தடித் தாக்குதலில் 13 சிப்பாய்கள் கொல்லப்பட்டதை அடுத்து, மறுநாள் காலை குடாநாட்டில் படையினர் பரவலாக நடத்திய தாக்குதல்களில் மினிவான் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழுபேர் உட்பட 51 பேர் கொல்லப்பட்டனர்.

அதேநாளில் திருமலையில் கடற்படையினர் தமிழ் மக்களின் வீடுகளுக்குத் தீவைத்து பலரை இடம்பெயரவைத்தனர். திருநெல்வேலியில் உயிரிழந்த சிப்பாய்களின் 13 சடலங்கள், படுகாயமடைந்த நிலையில் பின்னர் வைத்தியசாலையில் மரணமானவர்களின் 2 சடலங்கள் உட்பட 15 சடலங்களும் கொழும்பு கனத்தையில் தகனம் செய்யப்பட்டன.

திருநெல்வேலித் தாக்குதலுக்கு கொழும்பு ஊடகங்கள் சில கொடுத்த அளவுக்கதிகமான முக்கியத்துவம், சிப்பாய்களின் சடலங்களை அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பாமல் கொழும்பில் தகனம்செய்ய எடுத்த நடவடிக்கை இவை இரண்டும் இனவாதிகளுக்கும், காடையர்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. தமிழ் மக்களுக்கு ஒரு பாடம் புகட்ட ஜே.ஆர். விரும்பினார். திருநெல்வேலித் தாக்குதல் இதற்குத் தீனிபோட்டது.

அது இனவாதத் தீயை மூட்டிப் பேரழிவுக்கு வித்திட்டது.

எதுவோ, கறுப்பு ஜூலை நாட்டைப் பல தசாப்தங்கள் பின்னால் தள்ளிவிட்டது. இந்தத் தவறை சிங்கள மக்களும் சிங்கள அரசியல்வாதிகளும் இன்னும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. போர் முடிவடைந்து கடந்த நான்கு வருட காலம் நாட்டில் இடம்பெற்று வருபவை இதனை உணர்த்துகின்றன. கடந்தகால அழிவுகளும் பின்னடைவுகளும் தென்இலங்கைத் தலைவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

இலங்கை பெரும்பான்மை இன மக்களுக்கு மட்டுமே சொந்தமானது . இங்கு வாழும் சிறுபான்மை இன, மதங்களைச் சேர்ந்தவர்கள் தமக்குப் பிச்சையாக வழங்கப்படும் சிறுசிறு உரிமைகளோடு, கொடுப்பதை வாங்கிக் கொண்டு திருப்திப்பட வேண்டும் - என்ற மேலோங்கிப் போக்கை தளர்த்துவதற்குத் தயாரில்லை என்ற நிலைப்பாடே உயர்ந்து செல்கிறது.

அனைத்துலக நியமங்களுக்கோ, நியாயங்களுக்கோ எல்லா வேளைகளிலும் செவிசாய்க்காமல் தனித்து நின்று இயங்க முடியும் என்ற போக்கு ஒரு சதவீதமேனும் உதவாது. இலங்கையின் பேரினவாத சக்திகளும் அவற்றின் ஆதரவில் தங்கி இருக்கும் அரசுகளும் இதனைக் காலங்கடந்தேனும் கருத்தில் கொள்ளலாகாதா...?

# சிங்கள அரசியல்வாதிகள் திருந்தினால் தமிழர் பிரச்சினையும் தீர்ந்துவிடும்

சிறுபான்மை - பெரும்பான்மை என்கின்ற தோற்றத்தின் ஊடாக இனப்பிரச்சினை நோக்கப்படுமாயின் பல்லின நாடுகள் வாழும் இலங்கையின் அரசியல் இயங்குநிலை தொடர்பில் மிகத் தவறான கற்பிதத்தை உருவாக்கும். இவ்வாறு சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தென்னாசியவியல் பேராசிரியரான வி.சூரிய நாராயணன் The New Indian Express ஊடகத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வுகளை வழங்குதன் மூலம் நாட்டில் இன மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை தனது அரசு ஏற்றுக்கொள்ளும் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இத் தெரிவுக் குழுவின் தலைவராக மூத்த அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தமது சொந்தக் காரணங்களுக்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைவதற்கான அழைப்பை நிராகரித்துள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது தற்போதைய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகிறது.இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மை இனமாக உள்ளதால் இவர்கள் தொடர்பான பரிந்துரைகள் மிக இலகுவாகத் தட்டிக்கழிக்கப்படும். தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கும் நீதியை வழங்காமல் விடுவதற்கும் அனைத்துக் கட்சி மாநாடுகள் 1983களில் இருந்து சமாதான முயற்சிகளைக் கையாள்வதில் சிறந்த கருவியாகப் பயன்படுத்தப்படுவதாக அரசியல் ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் இந்திய அரசு கலந்தாலோசித்து உருவாக்கப்பட்ட பிற்சேர்க்கையானது இலங்கையின் நிறைவேற்று அதிபராகச் செயற்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அனைத்துக் கட்சி மாநாட்டின் ஒப்புதலுக்காக முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்தப் பிற்சேர்க்கையானது அனைத்துக் கட்சி மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்திய வம்சாவழியினருக்கு இலங்கையில் குடியுரிமை வழங்குவது என்கின்ற கோரிக்கை தவிர இந்தப் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்ட வேறெந்த பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இலங்கையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட இவ்வாறான உடன்படிக்கைகள் முறிவடைந்துள்ளன. இதனால் நாட்டை மாறிமாறி ஆட்சி செய்யும் பிரதான கட்சிகளான ஐ.தே.க. மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி என்பன இனப் பிரச்சினை விடயத்தில் இணைந்து தீர்வை முன்வைக்க வேண்டிய தேவையுள்ளது. தமிழ் மக்கள் விடயத்தில் இவ்விரு பிரதான கட்சிகளும் இணைந்து நடவடிக்கை எடுத்தால் சிங்கள மற்றும் தமிழர்கள் மத்தியில் செயற்படும் தீவிரவாதிகளை மிக இலகுவாக ஓரங்கட்ட முடியும்.

1950களின் நடுப்பகுதியிலிருந்து, இரங்கை அரசியல் முறைமையில் இரு பிரதான விடயங்கள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அதாவது: முதலாவதாக, பெரும்பான்மைச் சிங்கள சமூகமானது இலங்கை மிகப் பலமான ஒற்றை நாடாக, மத்திய அரசின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, இலங்கைத் தமிழ் மக்களின் பார்வையில், அதிகாரங்கள் பகிரப்பட்டு, சமஸ்டி நிர்வாக முறைமை தோற்றுவிக்கப்பட்டு, இலங்கையில் இருந்து பிரிந்து தமக்கான தனிநாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர். அதிகாரப் பகிர்வானது மாகாண சபைச் சட்டம் மற்றும் 13வது திருத்தச் சட்டம் போன்றவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான அதிகாரப்பகிர்வானது ஒற்றையாட்சியின் கீழ் சமஷ்டி நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக காணப்பட்டது.

சிறுபான்மை - பெரும்பான்மை என்கின்ற தோற்றத்தின் ஊடாக இனப்பிரச்சினை நோக்கப்படுமாயின் பல்லின நாடுகள் வாழும் இலங்கை அரசியல் இயங்குநிலை தொடர்பில் மிகத்தவறான கற்பிதத்தை உருவாக்கும். குறிப்பிடத்தக்க சில அரசியல் அவாக்களைக் கொண்டுள்ள தமிழ்மக்களின் கோரிக்கைகள் தேசிய ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இலங்கை அரசினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் சந்தித்து சமரசப் பேச்சுக்களை நடத்த வேண்டும். வடக்கு, கிழக்கில் வாழும் இங்கைத் தமிழ் மக்கள் சந்திக்கும் பிரதான பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வை முன்வைக்க முடியும் என்பது தொடர்பாக கலந்துரையாட வேண்டும்.

மொழிக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்துதல், தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்தல், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்தல், தமிழர் வாழ் பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களையும் இராணுவத்தினரையும் அகற்றுதல், மனித உரிமை மீறல்கள் மற்றும் தமிழ் மக்கள் காணாமற் போதல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும் கலந்துரையாடி, இலங்கை அரச பிரதிநிதிகளும், கூட்டமைப்பு பிரதிநிதிகளும் தீர்வுகளை முன்வைக்க வேண்டும். சிங்கள அரசியல்வாதிகள் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமே ஒழிய, இவர்களின் நடவடிக்கைகள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வழிகோலுவதாக அமைந்து விடக் கூடாது.

இலங்கை அரச பிரதிநிதிகளும், கூட்டமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். இவ்வாறான இரு தரப்பு பேச்சுக்களின் பின்னணியில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்கவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்தது. இரு தரப்புக்களும் இது தொடர்பில் உடன்பட்டதன் பின்னர் இதற்கான முயற்சியை ஆரம்பிக்க முடியும் என கூட்டமைப்பு பிரதிநிதிகள் இலங்கை அரசிடம் தெரிவித்தனர். ஆனால் இலங்கை அரசு கூட்டமைப்பின் கோரிக்கைக்கு செவிசாய்க்காது இழுத்தடித்தது. இந்நிலையில் அரசு தமிழ் மக்கள் தொடர்பில் துரோகம் இழைப்பதாக கூட்டமைப்பு உணர்ந்து கொண்டது.

இனக் கிளர்ச்சிகளுக்கு சமாதான வழித் தீர்வைத் தேடும் எந்தவொரு உலக நாடுகளிலும், அரசுகள் தமது நாட்டில் பாதிக்கப்பட்ட தரப்புடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துவது பொதுவானதாகும். 1985இல் ரஜீவ் காந்தி - லோங்கோவால் உடன்பாடானது, இந்திய அரசிற்கும் அகாலி தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சமரசப் பேச்சுக்களின் விளைவானதாகும். அகாலி மக்களின் சில கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு செயற்படுவதாக இந்திய அரசு வாக்குறுதியளித்ததன் விளைவாக இந்த உடன்பாடு எட்டப்பட்டது. இதற்காக அகாலி மக்கள் மத்தியில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதன் பின்னர் அகாலி மக்களின் காலிஸ்தான் இயக்கம் பின்னர் மறைந்து போனது.


இதேபோன்று 1986ல் மிசோ உடன்பாடு எட்டப்பட்டது. இதன் மூலம், லல்டென் காவால் தலைமை தாங்கப்பட்ட மிசோ தேசிய முன்னணிக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சுக்களின் விளைவால் 1987 பெப்ரவரியில் மிசோறாமிற்கு மாநில நிலை வழங்கப்பட்டது. இதன்பின்னர் மிசோறாமில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு, மிசோறா மாநில மக்கள் தாம் இந்தியக் குடிமக்கள் எனக் கருதும் நிலையை அடைந்தனர். மிக நீண்ட காலமாகத் தொடரும் நாகா பிரிவினைவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இந்திய மத்திய அரசு பேச்சுக்களை நடத்தி வருகிறது. இந்த முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

இந்தோனேஷியாவில் தனிநாடு கோரிப் போராடிய ஆசே மாநில ஆயுதக் குழுவுடன் அந்நாட்டு அரசு பேச்சுக்களை நடத்தியதன் விளைவாக இங்கு வன்முறைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. இங்கு பிரிவினைவாதம் ஏற்படுவதற்கு காரணமாகக் காணப்பட்ட இயற்கை வளங்கள் தொடர்பில் தற்போது புதிய கோட்பாடுகள் நிறுவப்பட்டன. ஆழிப்பேரலையின் விளைவாக இயற்கை வளங்களுக்காக மோதிக் கொண்ட மக்கள் உண்மை நிலையை உணர்ந்து கொண்டனர். ஓகஸ்ட் 15, 1995இல் 'சிறப்பு சுயாட்சியை' ஆசே மாநில மக்களுக்கு வழங்கும் கெல்சிங் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிங்களவர்களைப் போல ஆசே மாநில மக்களுக்கு சுயாட்சி வழங்குவதை ஜவானிஸ்கள் எதிர்த்தனர். ஒற்றை இந்தோனிஷியாவின் அரசியல் யாப்பில் ஆசே மக்களுக்கு சிறப்பான சுயாட்சி வழங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு பயனுள்ள தீர்வொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து வழங்க வேண்டும் என்பதை சிங்கள அரசியல்வாதிகள் உணரும் வரை இலங்கைத்தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவிப்பர். தமிழ் மக்களுக்கு சுயாட்சியைவழங்குவதன்மூலம்இலங்கை அரசானது பயனுள்ள அரசியல் தீர்வொன்றை முன்வைக்க முடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் அரசியல் சூழல் மேலும் மோசமடைந்துள்ளது ஒரு கெட்டவாய்ப்பாகும்.

*(நன்றி -புதினப்பலகை)*

# மறக்க முடியாத கறுப்பு ஜூலை



ராஜராஜன்

ஜூலை என்ற சொல்லைக் கேட்டாலே ஈழத் தமிழர்களின் இதயங்கள் ஒரு கணம் இயங்க மறுக்கின்றன. ஜூலை மாதம் என்ற சொல் கறுப்பு ஜூலையாகவே மாறிவிட்டது. அந்தளவுக்கு தமிழர்களின் மனங்களை ஒட்டுமொத்தமாக இருளுக்குள் தள்ளியது இந்த ஜூலை மாதம் தான்.

1983 ஜூலை மாதம் 21 ஆம் திகதி திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் வைத்து 13 இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சம்பவம் பேரினவாதிகளின் தமிழ் மக்களுக்கெதிரான அட்டூழியங்களுக்கு ஒரு சாட்டாக அமைந்து விட்டது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் கொழும்புக்குள் கொண்டு வரப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டதை அடுத்து தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை சிங்களக் காடையர்கள் ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் பொரளையில் அமைந்திருந்த தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் காடையர்களால் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டன. அன்று வைக்கப்பட்ட தீ நாடு முழுவதும் பற்றி எரிந்து, தமிழர்களைச் சுட்டுப் பொசுக்கியது. பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் உயிர்களைப் பறித்தது.

நாடு முழுவதும் இனவாதத் தீயினால் எரிந்து கொண்டிருந்த போது இதனை அணைப்பதற்கு அப்போதைய ஆட்சியாளர்கள் எதுவுமே செய்யவில்லை. மாறாக எரியும் நெருப்பில் அவர்கள் எண்ணெய்யை ஊற்றினர். அப்போது ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமது இனவாதத்தைக் கக்கும் முகத்தை வெளிக்காட்டினார். 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்ற ஜே.ஆரின் அறைகூவல் காடையர்களை மேன்மேலும் உற்சாகப்படுத்தியது. அவர்கள் தடுப்பார் எவரும் இல்லாத நிலையில் தமிழ் மக்களுக்கு எதிரான அழிவு வேலைகளை ஆவேசமாக மேற்கொண்டனர். பல தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். வீதிகளில் வாகனங்களில் சென்றவர்கள் வாகனங்களுடன் சேர்த்து எரியூட்டப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் காடையர் கும்பலினால் மானபங்கப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இனவாதிகளின் நோக்கம் தமிழர்களை அழிப்பதுடன் மட்டும் நிறைவேறவில்லை. தமிழர்களின் அத்திவாரத்தையே தகர்க்கும் திட்டத்துடன் செயலாற்றினர். இதன் காரணமாக தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் யாவும் சூறையாடப்பட்ட பின்னர் முற்றாக அழிக்கப்பட்டன. கோடீஸ்வரர்களாக உலாவந்த பலர் அகதி முகாம்களில் தஞ்சமடைய வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவர்களில் பலர் கொழும்பை இறுகப் பிடித்துக்கொண்டு இருந்ததுடன் ஆட்சியாளர்களுக்கும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்து வந்தனர். ஆனால் அப்போதைய இனவாத அரசு இவற்றையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. இவர்களையும் தமிழர்களாகவே பார்த்தது.

கொழும்பில் மட்டுமல்ல அம்பாந்தோட்டை வரை வர்த்தக நிலையங்களைக் கொண்டிருந்த தமிழ் வர்த்தகர்கள் உடுத்த துணியுடன் முகாம்களில் தஞ்சமடைந்தனர். கொழும்பு வாழ்க்கைதான் எமக்கு வேண்டுமெனக் கூறிக்கொண்டு கொழும்பையே தஞ்சமடைந்து தமது சொந்த ஊரைப் பல வருடங்களாக எட்டிப் பார்க்காத பலர், கப்பலில் ஏறி உடுத்த துணியுடன் தமது சொந்த மண்ணை மிதிக்க வைத்த பெருமையும் இந்தக் கறுப்பு ஜூலைக்கு உண்டு.

ஜூலை 23 தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்களாக இந்தக் கொடுமைகள் கொழும்பு உட்பட நாட்டின் சகல இடங்களிலும் நிகழ்த்தப்பட்டன. ஆனால் இனவெறியர்களின் வெறி அப்போதும் அடங்கியதாகத் தெரியவில்லை. வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது அவர்களின் கவனம் திரும்பியது. இதற்கு அப்போதைய ஆட்சியாளர்களும் பச்சைக்கொடி காட்டினர். தொடர்ந்து இரண்டு தினங்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உலகம் இதுவரை காணாத கொடூரங்கள் அரங்கேறின. இதற்கு வெலிக்கடைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிங்களக் கைதிகள் பயன்படுத்தப்பட்டனர். சிறைச்சாலையின் மையப் பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர் அடித்தும், வெட்டியும், குத்தியும் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் கொலைசெய்யப்பட்டனர்.

தமிழீழத்தை எனது கண்கள் பார்க்குமென நீதிமன்றத்தில் கூறிய குட்டிமணியின் கண்கள் 'இந்தக் கண்களா தமிழீழத்தைக் காணப் போகின்றன' என்று கேள்வி கேட்டவாறு தோண்டியெடுக்கப்பட்டன. இத்தகைய கொடுமையை இன்று நினைத்தாலும் நெஞ்சமெல்லாம் பதறுகின்றது. சிறைச்சாலைத் தாக்குதலில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், காந்திய இயக்கத் தலைவர் மருத்துவர் இராஜசுந்தரம் உள்ளிட்ட 53 பேர் கொடூரமான வகையில் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அப்போதைய ஆட்சியாளர்களின் வாயிலிருந்து ஒரு அனுதாப வார்த்தை கூட வெளிக்கிளம்பவில்லை. அவர்களே திட்டமிட்டு அரங்கேற்றிய இந்தக் கொடுமைகள் தொடர்பாக எவ்வாறு அவர்களால் வாயைத் திறக்க முடியும்?

உலக நாடுகளும் இந்தக் கொடிய சம்பவங்கள் தொடர்பாக அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. அப்போதைய இந்தியப் பிரதமராக விருந்த இந்திராகாந்தி அம்மையார் தமது வெளிநாட்டு அமைச்சரை இங்கு அனுப்பி வைத்த பின்னர் நிலைமைகள் ஓரளவு தணிந்தது என்பதை மறுக்க முடியாது.

முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தொடக்கம் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த பலரும் இந்தக் கறுப்பு ஜூலையின் கொடுமைகளுக்கு ஆதரவு வழங்கியதாகப் பாதிக்கப்பட்ட பலரும் அப்போது தெரிவித்தனர்.

இறுதியாக முள்ளிவாய்க்காலில் நடந்த அவலங்கள் இன்னுமொரு கறுப்பு ஜூலையின் வேறொரு பரிமாணத்தையே சுட்டிக்காட்டியுள்ளன. இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படும் வரை இன்னும் பல கறுப்பு ஜூலைகள் உருவாகுவதை எம்மைப் படைத்த இறைவனால் கூடத் தடுக்க முடியாது. தமிழர்களும் இந்த நாட்டின் பூர்விகக் குடிகளே என்பதை பெரும்பான்மையின மக்கள் ஏற்றுக்கொள்ளாதவரை இத்தகைய அவலங்கள் தொடர்கதையாகவே மாறிவிடும் ஏது நிலையை எவராலும் தடுக்க முடியாது.

ஆனால் அதிகாரம் இல்லாத மாகாண சபைகளுக்கு 13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட சில அதிகாரங்களைக்கூட இல்லாதொழிக்க வேண்டுமென அரசின் ஆதரவுக் குழுக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இந்த நிலையில் அமைதியும், ஒற்றுமையும் இனங்களுக்கிடையில் நிலவும் என்பதைக் கனவில் கூட கற்பனை செய்து பார்க்க முடியாது. கறுப்பு ஜூலை தமிழ் மக்களுக்கு நிரந்தரமாக வழங்கிய கசப்புணர்வை நீடிக்காது பார்த்துக் கொள்வது இந்த அரசின் கடமை என்பதை எவரும் மறுக்க முடியாது.

# தனி மனித நிறுவனம் கலைஞானி அ.செல்வரத்தினம்

கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்களின் 80 ஆவது பிறந்த நாள் இன்றாகும்.

ஓவியர், புகைப்படக்கலைஞர், நடிகர், தொல்பொருள் ஆய்வு மற்றும் சேகரிப்பாளர், பத்திரிகையாளர் எனப் பல்துறை ஆற்றல் கொண்டவராக விளங்கியவர் கலைஞானி அ.செல்வரத்தினம். பல துறைகளில் அவர் நாட்டம் கொண்டிருந்தாலும் அவர் புகழ்பெற்றது தொல்பொருள் அரும்பொருள் சேகரிப்பு துறையிலேயே ஆகும். அதற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துச் சேவையாற்றியவர்.

1933 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். பழைய பொருள்களைச் சேகரிக்கும் பழக்கம் இவரின் பள்ளிக் காலத்திலேயே ஆரம்பித்தது. பதினான்காம் வயதில் குரும்பசிட்டியிலுள்ள தம்வீட்டு வளவில் எதிர்பாராமல் கிடைத்த மூன்று பழைய நாணயங்களும் சங்கும் தொல்பொருள்களைச் சேகரிக்கும் தன்னுடைய ஆர்வத்துக்கு வித்திட்டதாக கலைஞானி பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அன்றிலிருந்து அரை நூற்றாண்டு காலமாக இந்த உன்னத இலட்சியத்துக்காகவே வாழ்ந்து மறைந்த மாமனிதரே கலைஞானி.

வெள்ளை வேட்டி அணிந்து சட்டை அணியாது உடலை வெள்ளை சால்வையால் போர்த்தியிருப்பார் கலைஞானி. கடல் அலை நிறத்தில் ஒரு குடுமி காற்றில் ஆடும் எளிமையான சாது போன்ற தோற்றம். ஒதுங்கிய துறவு வாழ்க்கை. எப்பொழுதும் வரலாற்றாய்வுச் சிந்தனை இப்படியாக பல இடப் பெயர்வுகளுக்கும் முகம் கொடுத்து சொத்துக்களை இழந்து அகதியாகி இருந்தும் தனது சேகரிப்புகளை கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தவர் அவர்.

பழைய பத்திரிகைப் பிரதிகள், சிலைகள், நாணயங்கள், ஓடுகள், செங்கற்கள், அரிய புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஏட்டுச்சுவடிகள், ஆயுள்வேத மருத்துவ மூலிகைகள் எனப் பல வகையான சேகரிப்புகள் அவரின் காட்சியகத்தில் அடங்கியிருந்தன. இவை தனி மனிதனாக இருந்து அவர் தேடித் தேடிச் சேர்த்த செல்வங்கள் எவரின் உதவியுமின்றி தனிமனித நிறுவனமாக பன்முகப் பார்வை கொண்ட கலைஞனாக தான் சார்ந்த சமூகத்தின் மீது பற்றுக் கொண்ட தேசப்பற்றாளனாக அவர் விளங்கினார் என்றால் இந்தப் பெரும் பணியை தன்தோள் மீது சுமப்பதற்கு உறுதியான நெஞ்சம் கொண்டிருந்தமையும் எவருக்கும் விலைபோகாத தனிமையும் பெற்றிருந்தமையுமே காரணங்களாகும். எமது கலாசாரச் சின்னங்கள் அழித்து ஒளிக்கப்பட்ட போது அதற்கெதிராகக் குரல் கொடுத்து வந்தவர் கலைஞானி "இலங்கை முழுவதிலும் மட்டுமல்ல இந்தியா முழுவதையும் எடுத்தாலும் தனியாள் சேகரிப்பு கலைஞானியிடம் தான் அதிகம்" என்று அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த சென்னைப் பல்கலைக் கழக பேராசிரியர் கொடுமுடி சண்முகமும் 'கொங்கு' பத்தரிகை ஆசிரியர் புலவர் இராசுவும் சுட்டிக் காட்டியிருந்தனர். கலைஞானியின் அரும்பொருள்களை உள்ளடக்கிய முழுமையான கண்காட்சி 1974 இல் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நிகழ்ந்த போது நடத்தப்பட்டதன் பின்னர் 1991 இல் மீண்டும் முழுமையான முறையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்த மன்றத்தின் ஆதரவில் தொடர்ந்து 12 தினங்கள் பல்கலைக்கழக நூல் நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்தக் கண்காட்சியில் ஈழத் தமிழர்களின் நாகரிக வரலாற்றைச் சித்தரிக்கின்ற பழைமை வாய்ந்ததும், பல்துறை சார்ந்ததுமான அரும்பொருள்களான தொல்லியற் சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், சமயம், வைத்தியம், சோதிடம், அரசியல் ஆகிய இன்னோரன்ன பல அரிய அறிவியற் பொக்கிஷங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

"எழுபதுகளிலே யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் நன்று செயற்பட்ட போது, அதில் ஈடுபாடுள்ள ஓர் உறுப்பினராகத் தொல்லியல் மேலாய்வுகள் சிலவற்றில் ஈடுபட்டவர். கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர் முதலிய இடங்களின் வரலாறு, தொல்லியற் சின்னங்கள் ஆகியன பற்றியும் இவர் நன்கு அக்கறை



காட்டி வந்தார். 1972 இல் அந்தக் கழகத்தின் செயலாளர் "நல்லூரும் தொல் பொருளியலும்" என்ற கட்டுரை எழுதுவதற்கு இவரே தூண்டுகோலாக விளங்கினார்" என்று பேராசிரியர் வி.சிவசாமி 1991 இல் எழுதிய குறிப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞானி போன்ற தியாகிகள் எதிர்காலத்தில் தோன்றுவது என்பது சந்தேகத்திற்கிடமானதொன்றே. அன்னாரின் சேவையை நினைவு கூருவதற்கு தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.

# பயர்பேட்ஸ் அணிக்கு விருது




ரஷ்யாவின் புனித பீற்றர்ஸ்பேக் நகரில் நடைபெற்ற சர்வதேச மைக்ரோசொப்ட் Imagine Cup போட்டியில் புதிய சிந்தனை, பூகோள ஆய்வு, எண்களின் விவேகம் ஆகியவற்றுக்கான சம்சுங் டிஜிட்டல் நேட்டிவ் விருதை இலங்கையை சேர்ந்த பயர்பேட்ஸ் அணியினர் வென்றெடுத்துள்ளனர்.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இன்போமெடிக்ஸ் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த பயர்பேட்ஸ் குழுவினர் கலந்துகொண்டனர்.


சென்சர் கட்டமைப்பின் உதவியுடன் கண்பார்வையற்றவர்களுக்கு தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான மென்பொருளை நிர்மாணித்த பயர்பேட்ஸ் குழுவில் ஸ்டெபான் உடுமலகல, மொஹமட் ஷெயான், அமல் குணதிலக்க, கிஷோகுமார் கணேஷலிங்கம் ஆகிய மாணவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

சர்வதேசத்தைச் சேர்ந்த 800 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்ட இந்தப்போட்டி வரலாற்று சிறப்புமிக்க எலைக்ஸ்ட்ரான்க்கி அரங்கில் நடைபெற்றதுடன் நடுவர் குழாம், ரஷ்ய பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சர்வதேச Imagine Cup போட்டிகள் புத்தாக்கம், விளையாட்டு, உலக குடியுரிமை ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் நடைபெற்றதுடன் பிரித்தானியா, ஆஸ்திரியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அந்தப் போட்டிகளில் வெற்றியீட்டியதுடன் தலா 50,000 அமெரிக்க டொலர்களை பரிசாக வென்றெடுத்தனர்.

சர்வதேச போட்டிகளுக்கு அனுசரணை வழங்கிய Samsung நிறுவனத்தினர் மூன்று பிரிவுகளிலும் சிறப்பாக செயற்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு Samsung Digital Native விருதை வழங்க முன்வந்ததுடன் இலங்கையைச் சேர்ந்த பயர்பேட்ஸ் அணிக்கே Samsung Digital Native விருதும் 10,000 அமெரிக்க டொலர்களும் பரிசாக வழங்கப்பட்டது.

# dash துணி துவைக்கும் சவர்க்காரம் அறிமுகம்




உயர்ரக தரத்தை கொண்ட உற்பத்திகளை மக்களுக்கு வழங்கி வருகின்றதும் துப்பரவு செய்யும் வர்த்தக நாமத்தை கொண்டதுமான dash இன் புதிய துணி துவைக்கும் சவர்க்காரம் அண்மையில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. dash சவர்க்காரத்தின் விசேட அம்சம் என்னவெனில் அது TFM தரத்தைக் கொண்டதாக அமைந்துள்ளமையாகும்.

TFM எனப்படும் Total Fatty Matter என்பது சவர்க்காரத்தின் தரத்தை அளக்க பயன்படுத்தப்படும் அளவீடாகும். அத்துடன் சவர்க்காரத்தின் எடையுடன் ஒப்பிடுகையில் காணப்படும் முழு கொழுப்பின் அளவையும் TFM மூலம் அறிந்துகொள்ளலாம்.இலங்கை தர கட்டுப்பாட்டு நிறுவனத்தின் 554 ஆம் இலக்க தரத்துக்கமைய துணி துவைக்கும் சவர்க்காரத்தில் 59 வீதம் TFM அடங்கியிருத்தல் வேண்டும்.

சந்தைப்படுத்தல் பிரசாரத்தில் சவர்க்காரம் என காண்பிக்கப்படும் அநேகமானவற்றில் TFM தரம் குறைவாகவே உள்ளதுடன் அவை அனைத்திலும் துணி துவைக்கும் சவர்க்காரம் என குறிப்பிடப்படவில்லை. யாராவது இதனை உற்றுப் பார்த்தால் அந்த உற்பத்திகளில் மிக சிறியதாக ஆங்கிலத்தில் Laundry Bar (லொண்ட்ரி பார்) அல்லது Detergent Soap (டிட்டர்ஜன்ட் சோப்) என்றே பொறிக்கப்பட்டிருக்கும்.

உற்பத்தி தரம் தொடர்பாக எந்நேரமும் அதிக அக்கறை கொண்டுள்ள இலங்கை நிறுவனமான மல்டிகெமி இன்டர்நஷனல் இந்த நிலைமையை புரிந்துகொண்ட பின்னர் மக்களுக்கு உயர்ரக தரத்தை கொண்ட TFM தரத்தில் தயாரிக்கப்பட்ட ஈச்ண்ட துணி துவைக்கும் சவர்க்காரத்தை அறிமுகப்படுத்தியது.

**TFM அளவு 59 வீதமாக அமைந்திருந்தால் ஏற்படும் நன்மைகள்**

- குறைந்தளவே கரைவதால் நீண்ட நாள்கள் பயன்படுத்த முடியும்.
- சுத்திகரிக்கும் தன்மை அதிகம் கொண்டது.
- அதிக அளவு துணிகளை துவைக்க முடியும்.
- அதிக நுரைகளைக் கொண்டுள்ளது.
- துணிகளுக்கு சேதம் இல்லை.

dash சவர்க்காரத்தை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் வைபவம் மல்டிகெமி நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் சமந்த குமாரசிங்கவின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த வைபவத்துக்கு நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஒரெஞ்ச் எலெக்ரிக்கல் போட்டியில் வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள்




இலங்கையின் மின் உதிரிப்பாக உற்பத்தியில் முன்னிலை நிறுவனமாக விளங்கும் ஒரெஞ்ச் எலெக்ரிக்கல் நடத்திய சி.எப்.எல். மின்குமிழ் பிரசார ஊக்குவிப்பு போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நாவின்னையிலுள்ள ஒரெஞ்ச் பிர தான அலுவலகத்தில் நடைபெற்ற பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த சுசூகி ஸ்விட் கார் ஒன்று, ஐந்து ரிவிஎஸ் மோட்டார் சைக்கிள்கள், 20 சோபா, இரண்டு கதவுகளைக் கொண்ட 20 குளிர்சாதனப் பெட்டிகள், 25 LED தொலைக்காட்சி பெட்டிகள், 30 சைக்கிள்கள் உட்பட பல பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன்போது சுசூகி ஸ்விட் காரை மொறொட்டுவாவைச் சேர்ந்த எம்.ஜி.ஜேம்ஸ் வென்றெடுத்ததுடன் அவர் பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சாரதியாக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமது வெற்றி தொடர்பாக கருத்து தெரிவித்த எம்.ஜி.ஜேம்ஸ், இந்த போட்டியில் கார் எனக்கு பரிசாக கிடைத்திருக்கின்றது என்ற செய்தியை நம்பவில்லை.

ஒரெஞ்ச் எலெக்ரிக்களிடமிருந்து நான் வெற்றியாளர் என்ற தகவல் கிடைத்தவுடன் அதிக பரபரப்புக்குள்ளானேன். நான் ஒரு பணக்காரன் அல்ல. எனது வாழ்க்கையை கொண்டு செல்வதில் அதிக கஷ்டத்தை எதிர்கொண்டேன்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் வாகன சாரதியாக பணியாற்றுகின்ற எனக்கு இப்பரிசு நிச்சயம் வாழ்க்கையை வளமாக்கும். பத்திரிகையில் வாசித்தே இந்த போட்டிக்கு எனது விண்ணப்பத்தை அனுப்பினேன். இன்று ஒரு காருக்கு நான் உரிமையாளராகியுள்ளேன். ஒரெஞ்ச் நிறுவனத்துக்கு நன்றிகள் என தெரிவித்தார். ஒரெஞ்ச் சீ.எப்.எல். மின்குமிழ் ஒன்றை வாங்கும்போது அதிலுள்ள மேல் உறையை அனுப்புவதன்மூலம் சீட்டிழுப்பில் பங்குபற்றக்கூடிய வாய்ப்பு பாவனையாளர்களுக்கு கிடைத்தது.

அத்துடன் புதிய ஒரெஞ்ச் சிஎப்எல் மின்குமிழொன்றை வாங்கும் அதேநேரம் மேலும் எந்தவொரு வர்த்தக நாமத்தையும் கொண்ட பழைய சிஎப்எல் மின்குமிழ் ஒன்றைக் கையளிக்கும் பாவனையாளர்களுக்கு சீட்டிழுப்பில் பங்குபற்றுவற்கான மேலதிக கூப்பனொன்றும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சி.எப்.எல் மீள் சுழற்சி கட்டமைப்பை கொண்டுள்ள இலங்கையின் ஒரே நிறுவனமாக ஒரெஞ்ச் எலெக்ரிக்கல் நிறுவனமே உள்ளது. முழு தெற்கு ஆசியாவுக்கும் உள்ள ஒரே கட்ட மைப் பும் இதுவாகும். சீ.எப்.எல் கனுதெனு (கொடுக்கல் வாங்கல்) ஊக்குவிப்பு ஊடாக சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டியது அனைவரது பொறுப்பு என்பதை ஒரெஞ்ச் உணர்த்தி நின்றது. (த)

# டிமோவின் ஏற்பாட்டில் திருகோணமலையில் Mercedes Trophy

இலங்கையில் மிகவும் பிரசித்திபெற்று விளங்கும் கோல்ஃப் சுற்றுப் போட்டியான மெர்சிடிஸ் கேடயத்துக்கான போட்டி MercedesTrophy ஜூன் 29 2013 அன்று சீனன்குடா ஈகில்ஸ் லிங்கில் (Eagles' Links China Bay) இடம்பெற்றது. மெர்சிடிஸ்-பென்ஸ், ஜீப் மற்றும் கிரைஸ்லர் உரிமையாளர்களுக்குப் பிரத்தியோகமாக இடம்பெற்ற இந்தப் சுற்றுப் போட்டியை டிமோ ஏற்பாடு செய்திருந்தது. நான்கு ஹன்டிகப் பிரிவுகளாக இடம் பெற்ற இந்த சுற்றுப் போட்டியில் 72 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். (பிரிவு ஏ ஹன்டிகப்- 0-12, பிரிவு பி ஹன்டிகப் - 13-20, பிரிவு சி ஹன்டிகப் 21-24, பிரிவு டி ஹன்டிகப் மகளிர் - 36). விளையாட்டு வீரர்களும் அவர்களின் கணவன்- மனைவியரும் ஜூன் 28-30ஆம் திகதி வரை திருகோணமலை சாயா பு ஹோட்டலில் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

ஈகில்ஸ் கோல்ஃப் லிங்ஸ், இலங் கையின் அழகிய கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள ஒரே பொருகோல்ஃப் மைதானமும் இலங்கையின் நான்காவது கோல்ஃப் மைதானமும் ஆகும். கடந்த 2012 ஜனவரி 7 அன்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படையின் பிரதானி எயார் சீவ் மார்ஷல் ரொடன் குணதிலக, இலங்கை விமானப் படையின் கட்டளைத் தளபதி எயார் மார்ஷல் ஹர் அபேவிக்கிரம, படைப் பிரதானி எயார் வைஸ் மார்ஷல் கோலித குணதிலக ஆகியோர் இந்த கோல்ஃப் விமானத்தைத் திறந்து வைத்தனர்.

வடக்கு, கிழக்கில் மும்முனை நட்சத்திரத்தின் பிரசன்னத்தைப் பறைசாற்று முகமாக திருகோணமலைப் பட்டினம், சீனன்குடாதுறைமுகம், ஈகில்ஸ் கோல்ஃப் கிளப்புக்குச் செல்லும் பாதைகளை மெர்சிடிஸ்- பென்ஸ் மற்றும் டிமோ கொடிகள் அலங்கரித்தன. ஜூன் 29 அன்று மாலையில் விருது வழங்கும் வைபவம் சாயாப் ஹோட்டலில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர் அபேவிக்கிரம கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார். டிமோவைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரஞ்சித் பண்டிதகே, கஹனத் பண்டிதகே, சன்ன வீரவர்தன, சுரே குணரத்ன மற்றும் திரு. ரஜீவ் பண்டிதகே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

''இது ஒரு வெற்றிகரமான நிகழ்வு, ஈகில்ஸ் கோல்ப் மைதானத்தில் எமது வீரர்கள் தமது கோல்ஃப் விளையாட்டுத் திறமையை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தியது மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து ஹோட்டலில் தமது சக ஊழியர்களுடன் ஓய்வாகப் பொழுதைக் கழிக்கக்கூடியதாகவும் இருந்தது.

# மழை காலத்துக்கு முன்னர் வீதிகளைப் புனரமைத்து வழங்கவும்

## சிவபுரம் மக்கள் அவசர கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 23

பரந்தன் சிவபுரம் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகளை மழை காலத்துக்கு முன்னர் புனரமைத்து வழங்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவபுரம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் வழங்கப்படாத நிலையில் காணப்படுகின்றனர். இந்தக் கிராமத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் இங்குள்ள வீதிகள் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

மேலும், மழை காலங்களில் இங்குள்ள வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதுடன் சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் உட்பட்ட அனைத்து மக்களும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலை ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றது. மழைகாலங்களில் மட்டுமே இந்தக் கிராமத்தின் வீதிகளையும் மக்களின் அவலங்களையும் பார்வையிடும் அரச அதிகாரிகளும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களும் விரைவில் வீதிகள் புனரமைக்கப்பட்டுவிடுமெனச் சொல்லிவிட்டு செல்கின்ற போதிலும் எந்த விதமான நடவடிக்கையும் இடம்பெறுவதில்லையெனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருவருடத்துக்கு முன்னர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று வீதிகளைப் புனரமைப்பதாகக் கூறி வீதியோரங்களில் வடிகால்களை அமைப்பதற்கான குழிகளை வெட்டியது.


மேலும், வீதிகளுக்குக் குறுக்காகவும் குழிகள் நீளமாக வெட்டப்பட்டன. அவர்களும் தமது பணிகளை இடைநடுவில் நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இதனால் அந்த நிறுவனத்தினரால் வெட்டப்பட்ட குழிகள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரியளவில் இடையூறாகக் காணப்படுகின்றன. மேலும், இந்தக் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட மட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் கதைக்கப்பட்ட போதிலும், இன்றுவரை எந்த வித அபிவிருத்தியும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னராவது இந்தக் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகளையாவது திருத்தியமைத்துத் தருமாறு கேரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க-426)

## மீன் பிடியில் மந்தநிலை



மன்னார், ஜூலை 23

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வாரங்களாக மீன்பிடித் தொழிலில் பெரும் மந்த நிலை காணப்படுவதால் மீனவக் குடும்பங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

கால நிலை மாற்றம் காரணமாகக் கடலில் கடுமையான காற்று வீசி வருவதால் குறைந்த அளவு மீன்களே வலையில் பிடிபடுகின்றன.

இதனால் அதிக செலவில் எரிபொருள்களைப் பயன்படுத்தித் தொழிலுக்குச் செல்கின்ற போதிலும் அந்தப் பணத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தாம் உள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மன்னாரில் கடல் உணவுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு கடல் உணவுகளின் விலையும் பல மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. (க-12)

# மைதானத்துக்கு முட்கம்பி வேலி

## எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் விளையாட்டுக் கழகத்தினர்

அக்கராயன், ஜூலை 23


ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் பயன்படுத்தி வந்த விளையாட்டு மைதானத்துக்கு முள்வேலி அமைப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு அந்தக் கழகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினர் தாம் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தி வருகின்ற மைதானத்துக்கு ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை நிர்வாகத்தினர் முட்கம்பிவேலி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில்; 1990 ஆம் ஆண்டு காடாக இருந்த மேற்படி மைதானம் அமைந்துள்ள காணியை கழக அங்கத்தவர்களின் கடும் உழைப்பினால் மைதானமாக உருவாக்கி எமது விளையாட்டுக் கழகம் பயன்படுத்தி வந்தது. மேலும் விளையாட்டுக்களில் பல சாதனைகளை எமது விளையாட்டுக் கழகம் நிலை நாட்டியுள்ளது.

எமது விளையாட்டுக் கழகம் ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலைக்குப் பக்கபலமாக இருந்து வருகின்றது. இந்த நிலையில் பாடசாலை நிர்வாகத்தினர் எம்முடன் கலந்தாலோசிக்காது விளையாட்டு மைதானக் காணியை நில அளவை செய்ததுடன் மைதானத்தைச் சுற்றி முட்கம்பி வேலி அமைப்பதற்கான தூண்களையும் நிறுவி வருகின்றது.

இதனைத் தடுத்து நிறுத்துவதுடன் விளையாட்டுக் கழக வீரர்களின் செயற்பாடுகளுக்கு உதவிபுரியுமாறு பணிவுடன் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)



## ஓய்வு மண்டபங்கள்

அக்கராயன், ஜூலை 23

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு குளங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு ஓய்வு மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

நன்னீர் நீரியல்வளத்துறை அமைச்சினால் தலா 15 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

இரணைமடுகுளத்தின் கீழும், கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழும் இந்த ஓய்வு மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன. (க-18)

## பூந்தோட்டம் விபத்தில் ஐவர் படுகாயம்

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஐந்துபேர் படுகாயம் அடைந்து வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிய வருகின்றது.

கடந்த புதன்கிழமை பூந்தோட்டம் வீதியில் சென்று கொண்டிருந்த சைக்கிளைப் பின்னால் வந்த ஓட்டோ முந்திச் செல்ல முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது சைக்கிளில் சென்ற சிறுமியும் ஓட்டோவில் சென்ற நால்வரும் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (க-421)

## வவுனியா மணிக்கூடு நின்றது, நின்றதுதான்!

வவுனியா, ஜூலை 23

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு இயங்காத நிலையில் காணப்படுவதால் மக்களுக்குப் பயன்படாத நிலை தோன்றியுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள், வர்த்தகர்கள், உட்படப் பலரும் இந்த மணிக்கூட்டைப் பார்த்து நேரத்தை அறிந்து கொள்வது வழமையான செயற்பாடாகும்.

ஆனால் தற்போது மணிக்கூடு இயங்காத நிலையில் உள்ளமை மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-402)



# மோசடிக்காரர்களால் ஏமாற்றப்படும் கிளிநொச்சி மாவட்ட மக்கள்

அக்கராயன், ஜூலை 23

கிளிநொச்சியில் மோசடிகாரர்களின் வலையில் சிக்கிப் பலர் தமது பணத்தை இழந்து தவித்து நிற்பதைக் காணமுடிகின்றது.

பெருமளவு பணத்தைச் செலுத்தி ஒருபொருளை வாங்கிவிட்டு வாங்கியவர் அதனைப் பற்றிப் பலருக்குக் கூறி அவர்களையும் இதில் பணம் செலுத்த வைத்தார். ஆனால் பெருந்தொகைப் பணம் மாதம் மாதம் வரும் என்று நம்பிய பலர் ஏமாந்துள்ளார்கள்.

கிளிநொச்சியில் சிலர் பெருமளவான பணம் வரும் என்று நம்பி தமது பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைக் கூட அடகுவைத்துப் பணம் கட்டியுள்ளனர். ஆனால் இவர்கள் எதிர்பார்த்த பணம் கிடைக்காத நிலையில் ஏமாந்துள்ளனர்.

இதேபோன்று சிலர் குறிப்பிட்ட சில வர்த்தக நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிட்டு தாம் அந்த வர்த்தக நிலையத்தில் இருந்து வருவதாகக் கூறி தாம் கெண்டு வந்த ஆதார அட்டையை காட்டுகின்றனர்.



மேலும் அந்த அட்டையை 999 ரூபா பணம் செலுத்திப் பெற்றுக் கொண்டால் யாழ்ப்பாணத்தில் உள்ள தாம் சார்ந்த நிறுவனத்தில் மிகவும் மலிவான விலையில் பெறுமதியான கைத்தொலைபேசி, கைக்கடிகாரம், சோலர் கருவி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் கூறுகின்றனர். இதனை நம்பிய பலர் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்தி அந்த அட்டையைப் பெற்றுள்ளனர்.

பின்னர் இவர்கள் அந்த ஆசாமிகள் தெரிவித்த குறிப்பிட்ட நிறுவனங்களிடம் சென்று அந்த ஆதார அட்டையைக் காட்டிய போது அதைப் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது என்றும் இப்படியாக தாம் எவரையும் அனுப்பவில்லை எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பலரிடம் 999 ரூபாய் வீதம் மோசடி இடம்பெற்றுள்ளது.

இந்த மோசடிகளுக்குச் சில உள்ளூர் இளைஞர்கள், யுவதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(க-426)

உதயன்
23/07/2013

# வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாசார விழா

யாழ்ப்பாணம், ஜூலை 23

வவுனியா வடக்குப் பிரதேச செயலக கலாசார விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

'இயல், இசை நாடகத்தால் இன்பத் தமிழ் வளர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் கலாசார விழா நடைபெறவுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ச.மோகநாதன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம், ஊடகவியலாளரும், ஆய்வாளருமான அருணா செல்லத்துரை ஆகியோரும்-

கௌரவ விருந்தினர்களாக வவுனியா வடக்குப் பிரதேச சபை தவிசாளர் மு.பாலசுப்பிரமணியம், வவுனியா நகர சபையின் முன்னாள் தலைவர் லிங்கநாதன், சேவா லங்கா நிகழ்ச்சித் திட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி அன்ட்ரோய் பிறேமலதா உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

> “பண்டார வன்னியன் வரலாற்று நாடகமும் கலை வேந்தன் இசை நாடக வள்ளல் ம.தைரியநாதனின் பூதத்தம்பி இசை நாடகமும் இடம் பெறவுள்ளன

இதில் காலம்தோறும் தமிழ் என்னும் சொற்பொழிவும் நெடுங்கேணி நாவலர் முன்பள்ளி மாணவர்களின் இசையும் அசைவும் இடம்பெறவுள்ளது.

மருதமுகில் என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளது.

பாடசாலை மாணவ, மாணவிகளின் நடனங்கள், நாடகங்கள் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து நெடுங்கேணி செம்மொழி கலாமன்றத்தின் இன்றைய உலகில் தமிழர் பாரம்பரியம் பெரிதும் பின்பற்றப்படுகின்றதா? பின் தள்ளப்படுகின்றதா? என்ற தலைப்பிலான பட்டிமன்றமும், புளியங்குளம் நிருத்தியகலாசேஷ்திர நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் கீதாஞ்சலியும் வடக்கு சமுர்த்தி அலுவலர்களின் இனியாகினும் திருந்துவோம் எனும் தலைப்பிலான தாளலயமும், கற்சிலைமடு பரந்தாமன் கலாமன்றத்தினரின் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகமும் கலை வேந்தன் இசை நாடக வள்ளல் ம.தைரியநாதனின் பூதத்தம்பி இசை நாடகமும் இடம்பெறவுள்ளன.(வ-400)



இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளுக்காக வேலணையில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 516 பேர் பயன்பெற்றுள்ளதாக மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் தெரிவித்தார். வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையின்போது, ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. ஓய்வூதியம், இறப்புப் பணிக்கொடை, மரணப் பணிக் கொடை போன்ற விடயங்கள் தொடர்பாக பயனாளிகளுக்கு பூரண விளக்கம் வழங்கப்பட்டது. (ஒ-5)

## பதவி நிலை அலுவலருக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடக்கு மாகாண அலுவலர்களில் பணிபுரியும் பதவி நிலை அலுவலர்களுக்கான வேலை விவரணம் தொடர்பான பயிற்சிப் பட்டறை இலII நாளை மறுதினம் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் ஏற்கெனவே நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை இல I இல் பங்குபற்றிய உத்தியோகத்தர்களை பயிற்சிப் பட்டறை II இல் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 23

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான சான்றிதழ் பெறுவதற்கான யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் க.பொ.த சாதரண தரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக சுய விவரங்களை மாவட்ட அலுவலர், றைற்றா இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (வு-14)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மிதுனம்:** நட்பால் ஆதாயம் உண்டு. தாய்வழியில் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மேலதி காரி ஆதரிப்பார். எதிலும் நிதானித்துச் செயற்படப் பாருங்கள்.

**கடகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**சிங்கம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**கன்னி:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஊத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**நாளை**

ஆடி-08 புதன்கிழமை 24.07.2013
திதி: துதியை மு.இ. 08.27 வரை
நட்சத்திரம்: திருவோணம் கா. 06.24 வரை
சுபநேரம்: 04.32 - 06.02 வரை
இராகுகாலம்: 12.02 - 01.32 வரை

**துலாம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும்.

**விருச்சிகம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். அயல் வீட்டாரின் அனபுத் தொல்லைகள் விலகும். கோபம் நீங்கும்.

**தனுசு:** எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். முன் கோபத்தை குறையுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**மகரம்:** உறவுகளுடன் வீண் விவாதங்கள் வந்து போகும். திடீர் நண்பர்களை வீட்டுக்குள் அழைத்து வர வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**கும்பம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

**மீனம்:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 3 | | 9 | 8 |
| 3 | | | | | | 7 | 5 | 1 |
| 6 | 9 | | | | 5 | | 4 | |
| | 8 | 6 | | 7 | 4 | | | |
| 5 | | | 3 | | 8 | | | 9 |
| | | | 5 | 1 | | 8 | 2 | |
| | 6 | | 4 | | | | 1 | 7 |
| 2 | 7 | 9 | | | | | | 4 |
| 1 | 4 | | 8 | | | 2 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 3 | 8 | 6 | 4 | 5 | 1 | 2 |
| 5 | 8 | 6 | 2 | 1 | 7 | 3 | 4 | 9 |
| 2 | 4 | 1 | 5 | 3 | 9 | 8 | 7 | 6 |
| 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 1 | 9 | 5 |
| 8 | 5 | 2 | 9 | 4 | 1 | 7 | 6 | 3 |
| 9 | 1 | 7 | 6 | 5 | 3 | 2 | 8 | 4 |
| 4 | 6 | 8 | 3 | 7 | 2 | 9 | 5 | 1 |
| 1 | 2 | 9 | 4 | 8 | 5 | 6 | 3 | 7 |
| 3 | 7 | 5 | 1 | 9 | 6 | 4 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந் தப்பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரை யான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகை யில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிர பல்யமானது.

# மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்கள் பள்ளிக்கூடம் செயல்திட்டத்துடன் இணைந்து நடத்திய

# க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை

MORA 2015 e-Tamils

# 2013 பெறுபேறுகள்

பள்ளிக்கூடம்

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்கள் பள்ளிக்கூடம் செயல்திட்டத்துடன் இணைந்து நடத்திய க.பொ.த உயர்தர வகுப்பு கணிதம் மற்றும் உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி முதல் சிறப்பாக நடைபெற்றது. அதில் முதல் 30 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள்.

உங்கள் பெறுபேறுகளை அறிந்து கொள்ள www.moramodelexam.com

## உயிரியல் பெறுபேறுகள்

| Index | Name | District | Biology | Physics | Chemistry | Z-Score | District rank | Island rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| B-01-0069 | T. AATHAVAN | Jaffna | A | A | A | 3.0302 | 1 | 1 |
| B-01-0385 | S.THINESH | Jaffna | A | A | A | 2.8806 | 2 | 2 |
| B-01-0398 | SAJITHARA .T | Jaffna | A | A | A | 2.8773 | 3 | 3 |
| B-01-0386 | K.KIRITHARAN | Jaffna | A | A | A | 2.8235 | 4 | 4 |
| B-01-0014 | S.JASOTHARAKRISHNA | Jaffna | A | A | A | 2.8158 | 5 | 5 |
| B-01-0053 | SHAMBAVI.Y | Jaffna | A | A | A | 2.6477 | 6 | 6 |
| B-01-0013 | R. SRITHUVARAGAN | Jaffna | A | B | A | 2.5229 | 7 | 7 |
| B-01-0003 | ABINAYA.T | Jaffna | A | A | B | 2.4830 | 8 | 8 |
| B-01-0276 | J. ANDREW VASANTHAN | Jaffna | A | A | B | 2.4599 | 9 | 9 |
| B-01-0048 | SHANTHANA.V | Jaffna | B | A | A | 2.4386 | 10 | 10 |
| B-01-0146 | K.THIVAKARAN | Jaffna | A | A | B | 2.4165 | 11 | 11 |
| B-04-3035 | IPNU SUKOOT FATHIMA RUSLA | Trinco | A | A | B | 2.3598 | 1 | 12 |
| B-06-4126 | NUKHANTHAMY.K | Ampara | A | A | B | 2.3140 | 1 | 13 |
| B-04-3333 | HINAYATHTHULLA THAHIRATHASNEEM | Trinco | A | A | B | 2.2902 | 2 | 14 |
| B-01-0060 | NINUJAH.T | Jaffna | B | A | A | 2.2579 | 12 | 15 |
| B-03-2711 | PRIMALA.V | Vavuniya | A | B | B | 2.2310 | 1 | 16 |
| B-01-0413 | P.SAYANTHAN | Jaffna | A | A | B | 2.2247 | 13 | 17 |
| B-01-0070 | S.SIVARAAM | Jaffna | A | B | B | 2.2181 | 14 | 18 |
| B-01-0068 | R.PIRANAVAN | Jaffna | A | A | C | 2.1780 | 15 | 19 |
| B-05-3583 | M.S.M.IHRAN | Batticoloa | A | A | C | 2.1736 | 1 | 20 |
| B-01-0029 | N.VEERADINESH | Jaffna | A | B | B | 2.1652 | 16 | 21 |
| B-01-0207 | P.KAPILRAJ | Jaffna | B | A | B | 2.1620 | 17 | 22 |
| B-03-2758 | S.KAJEETHAN | Vavuniya | A | A | A | 2.1413 | 2 | 23 |
| B-02-2125 | S.ARUNOTHAYAN | Colombo | B | A | B | 2.1386 | 1 | 24 |
| B-01-0142 | SENTHANA.M | Jaffna | B | A | A | 2.1306 | 18 | 25 |
| B-03-2729 | THANUJA. T | Vavuniya | A | A | B | 2.1097 | 3 | 26 |
| B-04-3022 | ALI AKBAR MOHAMED-RAFZAN | Trinco | B | A | B | 2.1012 | 3 | 27 |
| B-11-4722 | MOHAMED FAHUMI SUMAYYA | Mathele | B | A | B | 2.1003 | 1 | 28 |
| B-05-3502 | L.THANOOSAN | Batticoloa | A | A | B | 2.0647 | 2 | 29 |
| B-05-3656 | R.F.RIFTHA | Batticoloa | A | A | C | 2.0572 | 3 | 30 |

## கணிதப் பெறுபேறுகள்

| INDEX | NAME | DISTRICT | MATHS | PHYSICS | CHEMISTRY | Z-SCORE | DISTRICT RANK | ISLAND RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| M-01-0037 | S.RAAMRAJ | JAFFNA | A | A | A | 3.3777 | 1 | 1 |
| M-01-0089 | R.JATHURSHAN | JAFFNA | A | A | A | 3.0376 | 2 | 2 |
| M-01-0038 | N.LAVALOJAN | JAFFNA | A | A | A | 2.8056 | 3 | 3 |
| M-05-3522 | S.CHANGIRTHENAN | BATTICOLOA | A | A | B | 2.7367 | 1 | 4 |
| M-01-0337 | S.MEGALAATHAN | JAFFNA | A | A | A | 2.6980 | 4 | 5 |
| M-01-0308 | S.KURUPARAN | JAFFNA | A | B | A | 2.6119 | 5 | 6 |
| M-01-0111 | T.SIVATHAAS | JAFFNA | A | A | A | 2.5641 | 6 | 7 |
| M-02-2040 | J.JEYANTHASINGAM | COLOMBO | A | A | B | 2.4656 | 1 | 8 |
| M-05-3564 | R.ZINTHAH NAWAZ | BATTICOLOA | A | A | B | 2.3788 | 2 | 9 |
| M-01-0032 | K.SUTHAKAR | JAFFNA | A | B | A | 2.3282 | 7 | 10 |
| M-04-3019 | S.SIVANEEPAN | TRINCO | A | A | B | 2.3180 | 1 | 11 |
| M-03-2631 | T.THIVAKARAN | VAVUNIYA | A | A | B | 2.2947 | 1 | 12 |
| M-01-0310 | V.JATHURSHANAN | JAFFNA | A | B | A | 2.2871 | 8 | 13 |
| M-03-2627 | K.THANUSHAN | VAVUNIYA | A | B | A | 2.1974 | 2 | 14 |
| M-01-0029 | KABITHA.S | JAFFNA | A | A | B | 2.1808 | 9 | 15 |
| M-06-7035 | M.S.M.HASHIK | AMPARA | A | A | C | 2.1446 | 1 | 16 |
| M-03-2901 | P.THUVARAGAN | VAVUNIYA | A | A | B | 2.1264 | 3 | 17 |
| M-02-2141 | P.PRIYANTHAN | COLOMBO | A | A | C | 2.1254 | 2 | 18 |
| M-04-3043 | K.NERUKANTH | TRINCO | A | A | B | 2.1191 | 2 | 19 |
| M-01-0321 | KEERTHANA.R | JAFFNA | A | C | A | 2.0269 | 10 | 20 |
| M-02-2038 | D.INTHIRAKUMARAN | COLOMBO | A | B | B | 2.0186 | 3 | 21 |
| M-06-7020 | F.M.HASLAM | AMPARA | A | A | B | 2.0084 | 2 | 22 |
| M-01-0033 | S.KAJAANAN | JAFFNA | A | C | A | 1.9894 | 11 | 23 |
| M-01-0023 | NISHANTHINI.K | JAFFNA | A | A | B | 1.9705 | 12 | 24 |
| M-01-0022 | PIRAVEENA.B | JAFFNA | A | A | C | 1.9630 | 13 | 25 |
| M-05-3503 | R.SUGIRJAN | BATTICOLOA | A | B | C | 1.9538 | 3 | 26 |
| M-03-2603 | M.KAJAN | VAVUNIYA | A | A | B | 1.9263 | 4 | 27 |
| M-01-0078 | W.BENAJA | JAFFNA | A | C | B | 1.8996 | 14 | 28 |
| M-01-0047 | KETHAARANI.J | JAFFNA | A | C | B | 1.8930 | 15 | 29 |
| M-01-0309 | T.NISHANTH | JAFFNA | A | B | B | 1.8812 | 16 | 30 |

பரீட்சைக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Official Partner
www.harikanan.com, e-mail: print@harikanan.com
HARIKANAN (PVT) LTD.
PRINTERS OF THE NORTH
No: 424, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA. PHONE: 021-2222717, 021-7397530, FAX: 021-2222891

(C/10600)(10,6,3)

CAPSTONNE ENGINEERING COLLEGE
No. 01, 2nd Lane, Power House Road, Jaffna.
A/L பெறுபேறுகள் வெளியாகும் முன்னரே HND in ENGINEERING கற்கைநெறியை CAPSTONNE இல் ஆரம்பித்து 3 வருடங்களில் Engineering Degree இனைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு
(Maths, Bio, Commerce or Arts Students) T.P: 021 720 1190, 077 787 4645

NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna.

Pirakanth
Photocopy Center
Phone/Fax: 021 222 4675
#55, Palaly Road, Thirunelvely, Jaffna.

கிருபா லேணர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சி பாடசாலை)
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 021 222 4353, 021 492 3200

கஜமுகன் ஹாட்வெயார்
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2833

ஊடக அனுசரணை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22 . 03 . 1932

விண்ணில் 02 . 08 . 2012

அமரர்

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

திதி :- 23.07.2013

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எமது துயர்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(37655)(10,6,3)

## நீங்காத நினைவில் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தவராசா புவனேஸ்வரன்**

திதி:- 23.07.2013

தோற்றம்
17.04.1974

மறைவு
14.07.2003



காலங்கள் பல ஓடினும் கவலைகள் மறையாது கள்ளமற்ற உன் புன்னகையும் துடிப்பான உன் செயல்களும் எம் நெஞ்சைவிட்டு நீங்காது வாழும் காலம்வரை உன் நினைவில் பயணிப்போம்....

குடும்பத்தினர்.
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(31143)(45.6.3)

## கருத்துப் பரிமாற்ற கள நிகழ்வு இன்று

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந் தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற 'போறம்' (Forum) கருத்துப் பரிமாற்றக் கள நிகழ்வின் ஜூலை மாதத்துக்கான அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அமர்வுக்கு யாழ். பல்கலைக் கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் ம. சின்னத்தம்பி தலைமைதாங்குவார். நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் ஆளுமைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத் துறை உதவி விரிவுரையாளர்களான செல்வி றியோபிலா அல்பிரட், செல்வி தருணி சுந்தரலிங்கம், செல்வி கனிஸ்ரா ஆர்த்தி டெனிசியஸ் ஆகியோரும், மாணவர்களான செல்வி சர்மதா சந்திரசேகரம், செல்வி விதுஜா இராஜ்குமார் ஆகியோரும் கருத்துரையாற்றுவார்கள். தொடர்ந்து கருத்துப் பரிமாறல் இடம்பெறும்.(ந-23)

## புறொயிலர் கோழி இறைச்சி விலை வீழ்ச்சி

குருநகர், ஜூலை 23

குருநகரில் புறொயிலர் கோழி இறைச்சியின் விலை வீழ்ச்சி யடைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக கிலோ 520 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட இதன் விலை தற்போது 480 ரூபாவாகக் குறைந்துள்ளது. இன்னும் சில இடங்களில் 460 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (ஓ-51)

## கண்ணீர் அஞ்சலி



**விஸ்வலிங்கம் பொன்னுத்துரை**

(தலைவர்,பிரான்ஸ் மாதகல் நலன்புரி சங்கம்)

மாதகல் கிராமத்தின் கல்வி சமூக அபிவிருத்திகளில் தம் பங்கையாற்றி எம்மை உயர்த்திவிட்ட பெருந்தகைக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம். இவரது அஞ்சலி நிகழ்வு இன்று(23.07.2013)பி.ப.4.00 மணிக்கு மாதகலில் நடைபெறும்.

(31138)(3.5.6)

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **விஸ்வலிங்கம் பத்மராசா**



(முன்னாள் ஊழியர், சிமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)

பிறப்பு:
29.03.1953

இறப்பு:
09.06.2013

09.06.2013 அன்று எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவினால் நாம் செய்வதறியாது கலங்கி நின்ற வேளை எமக்கு ஆறுதல் அளித்து, தோளோடு தோள் நின்று உதவியளித்த எமது அயலவர்கள்,. உறவினர்கள், நண்பர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் மலர் மாலை அணிவித்தும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பனர்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் வைத்தும், இரங்கல் உரைகள் நிகழ்த்தியும் அனுதாபங்களைத் தெரிவித்த கோப்பாய்ப் பிரதேச செயலக, யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக, கோப்பாய் லயன்ஸ் கழக, தீபிட்டர் விளையாட்டுக் கழக, இஞ்சிலாக்கை சமூக முன்னெடுத்தல் குழு சமூகத்தினருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளைமறுதினம் [25.07.2013] வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம். **அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

[உங்கள் வருகை நிச்சயம் எமக்கு ஆறுதல் அளிக்கும்]

பத்ம கோட்டம்,
முருகமூர்த்தி கோயில் வீதி,
சங்கானை கிழக்கு, சங்கானை.

குடும்பத்தினர்.

(31105)(45.6.3)

## மரண அறிவித்தல்

### குணவதி கணேசபிள்ளை



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குணவதி கணேசபிள்ளை 17.07.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ர புத்திரியும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி -தங்கரெத்தினம் தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி (கொழும்பு), இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பிகையின் அன்பு மச்சாளும், காலஞ்சென்ற நாகரட்ணம் மற்றும் இராசலிங்கம் (கனடா), தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சீதாஜெயலட்சுமி (லண்டன்), ஜெகதீஸ்வரானந்தம் (லண்டன்), ஜெயகலாவாணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கருணாகரன் (லண்டன்), மணிவண்ணன் (கனடா), பகீரதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரகாஷ், சுமுகன், விஸ்மயா, பிரணயன், பிரித்திக்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.07.2013) புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு முற்பகல் 10 மணி தொடக்கம் ஒருமணிவரை கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No.4B, 6/2, Collingwood place,
Wellawatte.
T.P. # 077 916 3202 (Colombo)**

தகவல்: பிள்ளைகள்:
சீதாஜெயலட்சுமி,
ஜெகதீஸ்வரானந்தம்,
ஜெயகலாவாணி.

(சி.10624) (45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி கதிரித்தம்பி(அன்னை)



இருபாலை கிழக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கதிரித்தம்பி 21.07.2013 அதிகாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கதிரித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-பரமநாயகம் தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற சுந்தரம் தியாகராஜாவின் அன்புத் தங்கையும், விக்னேஸ்வரன், சர்வேஸ்வரி, ஸ்ரீகுமாரி, குகநேசன், திருவருட்செல்வன், பவானிதிசி, காலஞ்சென்ற தில்லைநாதன் ஆகியோரினது பாசமிகு அன்னையும், இராஜாமணி, உமா, ஜெயதேவி, கதிர்காமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், கோபிநாத், ரிஷிகேசன் (விஷ்ணு-றோயல் கல்லூரி), நிருத்தியா (மெதடிஸ்ற் கல்லூரி) ஆகியோரின் அப்பம்மாவும், ஆரபியின் அம்மம்மாவும், தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சுப்பிரமணியம், கந்தையா, கோப்பாய் யோகமலர் ஆகியோரின் மைத்துனியும், நித்தியானந்தன், சண்முகானந்தன், செந்தில்வல்லி, விசாகேசன், செந்தில்செல்வி, இளமுருகன், செந்தில்தேவி, செந்தில்நாதன், குகானந்தன், தையல்நாயகி, சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சீனியாச்சியும், இராஜயோகேந்திரராணி, யோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சர்வேஸ்வரன், யோகவல்லி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.07.2013)புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.3.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A 1, அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு -05

(சி/10623)(3.5.6)

தகவல்:
பிள்ளைகளும்,
மருமக்களும்.

# அழகு சாதனப் பொருள்கள் பனம்பொருள் உற்பத்தியில்

யாழ்ப்பாணம், ஜூலை 23
பனம் உற்பத்திப் பொருள்களில் இருந்து அழகு சாதன உற்பத்திகளைத் தயாரித்து அதனை வெகு விரைவில் சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபை எடுத்து வருவதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த காலங்களில் எமது முன்னோர்களால் பனம் பொருள்கள் அழகு சாதனப் பொருள்களாகவும், மருந்துப் பொருள்களாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தன. எனினும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப அவை ஒரு காலத்தில் கைவிடும் நிலைக்கு வந்துள்ளது.
இதனால் பனம் பொருள்கள் ஊடாகக் கிடைக்கக் கூடிய நன்மைகளை இழக்க நேரிட்டுள்ளது. இதனை மீளப் பயனடையச் செய்யும் நோக்குடன் சவர்க்காரம், முகப்பூச்சு(கிறீம்), சம்போ, பற்பசை போன்ற அழகு சாதனப் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பனம் பொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மத்தியில் இதற்கான பயிற்சிகளை வழங்கி அவற்றை தயாரித்து அவர்களாகவே விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
பனை அபிவிருத்திச் சபை இந்தத் திட்டத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-14)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## கழிவு வாய்க்கால் மூடப்படாததால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
காப்பெற் வீதியாக மாறியுள்ள கைதடி மானிப்பாய் வீதியில் கழிவு வாய்க்கால் மூடப்படாத நிலையில் காணப்படுகின்றது. அதனால் அந்தப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகளின்போது கைதடி-மானிப்பாய் வீதி அண்மையில் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. எனினும் கோப்பாய் பிரிவில் மானிப்பாய் வீதியில் கழிவு நீர் ஓடும் வாய்க்கால் இதுவரை மூடப்படவில்லை. இதனால் வீதியில் வாய்க்காலுக்குள் தவறி விழும் நிலையை மக்கள் எதிர்கொள்கின்றனர்.
குறித்த வாய்க்கால் வீதிக்கு சமாந்தரமாக இருப்பதால் வாய்க்கால் இருப்பதைக் கூட வாகன சாரதிகளால் அடையாளம் காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு வீதிப் புனரமைப்பைச் சீர்படுத்துமாறு அந்தப் பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-14)

## சாமஸ்ரீ தேசமான்ய விருது



யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.கரவெட்டி பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் எஸ்.ஜெயசங்கர் தேசமானியப் பட்டம் பெற்றார். இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், லயன்ஸ் கழக உறுப்பினராகவும், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட செயலாளரும் ஆவார். (எ)

# மன்னாரில் நடைபெற்ற தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா போட்டிகளின் முடிவுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரைப்போட்டி**

**ஆரம்பப் பிரிவு**

1ம் இடம்-பா. தர்சினி - மன்- உயிர்த்தராசன்குளம் றோ.க.த.பா
2ம் இடம் - மே. லயன்ஸ்கி -மன்-சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி தே.பா
3ம் இடம்-கொ. மபுசிக்கா -மன்-சென் லோறன்ஸ் றோ.க.த.பா

**மத்திய பிரிவு**

1ம் இடம்- மா. கீர்த்தனா லெம்பேட்-மன்-புனித ஆனாள் ம.ம.வி
2ம் இடம் - சு. மரியசீலி - மன்-உயிலங்குளம் றோ.க.த.பா
3ம் இடம்-அ. அருள் பிரகாஷ்-மன்-புனித சவேரியார் ஆண்கள் தே.பா

**உயர் பிரிவு**

1ம் இடம்-ஆ. ஆன் கலையரசி குரூஸ்-மன்-புனித ஆனாள் ம.ம.வி
2ம் இடம்-சி. நிமலினி - மன்-சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தே.பா.
3ம் இடம்-தி. பிரியதர்சினி - மன்-முருங்கன் ம.வி

**பேச்சுப்போட்டி**

**ஆரம்ப பிரிவு**

1ம் இடம்-ஜெயசேகரம் றுமேனி-மன்- புனித சவேரியார் பெண்கள் தே.பா
2ம் இடம்-றொ. றொமிலா - மன்-சென்லோறன்ஸ் றோ.க
3ம் இடம்-சதீஸ்குமார் கௌசிகன் மடு-அடம்பன் ம.ம.வி

**மத்திய பிரிவு**

1ம் இடம்-பா. அன்ரனி டிவைன்சன்-மன்-சென் லோறன்ஸ் றோ.க.வி
2ம் இடம்-கே. தனுஜா - மன்-சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தே.பா
3ம் இடம்-செ. நோர்மன் அசான் மன்-புனித சவேரியார் ஆண்கள் தே.பா

**மேற்பிரிவு**

1ம் இடம்-சூ. கட்சன் - மன்-சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி தே.பா
2ம் இடம்-ஜோ. நயன் - மன்-புனித சவேரியார் ஆண்கள் தே.பா
3ம் இடம்-வி. அனோஜா பரியதர்சினி-மன்-புனித சவேரியார் பெண்கள் தே.பா

**கவிதைப்போட்டி**

**மத்திய பிரிவு**

1ம் இடம்-வி. ஆன் கில்டா - மன்-தோட்டவெளி அ.த.க.பா
2ம் இடம்-க. மோகனப்பிரியா - மன்-உயிலங்குளம் றோ.க. த.பா
3ம் இடம் - அ. சௌமியா பறுனாந்து - மன்- சென் மேரிஸ் பெண்கள் பாடசாலை


**மேற் பிரிவு**

1ம் இடம் - கி. ஏஞ்சல் டலிமா - மன்- பற்றிமா ம. ம.வி
2ம் இடம்-ஸ். லக்ஷாயினி -மடு-பெரியபண்டிவிரிச்சான் ம.வி.
3ம் இடம்-லோ. மேரி திவ்யா பெர்னாண்டோ-மன்-புனித சவேரியார் பெண்கள் தே.பா. (ந-12)


## ஆலயங்களில் தேர்த் திருவிழாவின் போது...



அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்காட்சி கொடுத்த வேளையில்... (ஒ-8)



சங்கானை செங்கற்படை பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஆனைமுகன் தேரில் வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். (வ)



ஏழாலை புங்கடி அம்பலவாணர் சமேத சொர்ணாம்பிகை ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் தேரில் அம்பாள் வெளி வீதியுலா பவனி வரும் காட்சி. (ஒ-86)



நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய உற்சவத்தில் கைலாசநாதர் தேரில் வீதியுலா வருவதைக் காணலாம். (ஒ-7)

## தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி முறைமைகளை பயன்படுத்தினால் கைது



கொழும்பு,ஜூலை 23

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான முறைமைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான மீன்பிடி முறைமைகளை கையாள வேண்டாம் என்று மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம் உள்ளிட்ட பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்படும் மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் அரசுடைமையாக்கப்படுவதுடன் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## அடுத்தவாரம் முதல் நெல் கொள்வனவு



கொழும்பு,ஜூலை 23

அடுத்தவாரம் முதல் நெல் கொள்வனவு செய்யப்படும் என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

முதல் கட்டமாக அம்பாறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நெல் கொள்வனவை ஆரம்பிக்க முடியும் என்று சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க தெரிவித்தார்.

இதற்குத் தேவையான நிதி, களஞ்சிய வசதி மற்றும் ஏனைய வசதிகள் தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு புறம்பாக மாவட்ட செயலர் ஊடாகவும், கமநல சேவை உத்தியோகத்தர்கள் ஊடாகவும் நெல் கொள்வனவை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ச)

## மத்திய, மாகாண அரசுகளின் கீழ் ஒருங்கிணைந்த பொலிஸ் சேவை

### ஆராய்கிறது அரசு

கொழும்பு,ஜூலை 23

மத்திய அரசு மற்றும் மாகாண அரசுகளின் கீழ் ஒருங்கிணைந்த பொலிஸ் சேவை ஒன்றை உருவாக்குவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அரசின் உயர் மட்டத் தலைவர்களுக்கு இடையே இடம் பெற்றுள்ள பேச்சின் போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அதிகாரம் எந்தெந்த விதங்களில் பகிரப்பட வேண்டியுள்ளது என்பது குறித்து முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

எனினும் இந்தப் பேச்சில் முக்கியமான அதிகாரங்கள் மத்திய அரசின் கீழேயே நிலவ வேண்டியுள்ளது என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

> ” இறுதித் தீர்மானம் வடமாகாண சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னர் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் பொலிஸ் துறையின் கீழ் மட்ட உத்தியோகத்தர்களின் நிர்வாகச் செயற்பாடுகள், ஒழுக்காற்று விவகாரங்கள் மாகாண சபைகளுக்குக் கையளிக்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் வடமாகாண சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னர் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-22)

## விசாரணைகளை மேற்கொள்ள நவீன தொழில் நுட்பங்கள்



கொழும்பு,ஜூலை 23

காலம் கடந்த முறைகளை அகற்றி விரைவாக வழக்கு விசாரணைகளை பூர்த்தி செய்ய புதிய செயற்பாடுகள் நீதித்துறையில் அறிமுகப்படுத்தப்படும் என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பழைய பாரம்பரிய முறைகள் அகற்றப்பட்டு நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ற வசதியான முறைகள் இதில் அறிமுகமாகும்.

தபால் மூலம் வழக்கை தாக்கல் செய்தல், ஆரம்ப பிரதிகளை ஸ்கேன் செய்து பெறல், ஆரம்ப சாட்சியை சத்தியக் கடதாசி மூலம் பெறல், ஒரு நாளில் காலை, மாலை என இரு நீதிமன்ற தினங்களாகக் கொள்ளல் போன்றவை உயர்நீதிமன்றத்திலிருந்து ஆரம்பித்து கீழ் நீதிமன்றம் வரை நடைமுறைப்படுத்தப்படும்.

வழக்குக்கு வருவோர் சாட்சிக் கூண்டிலிருந்து கருத்துக்களை பெற்றுக் கொடுக்கும் முறை நீக்கப்பட வேண்டும்.

சட்டம் பற்றி மக்களுக்கு இன்று நல்ல அறிவு உள்ளது. -என்றார். (ச)

## தூக்க மாத்திரைகள் மீட்பு; அனுமதிப் பத்திரம் ரத்து



கொழும்பு,ஜூலை 23


கொஸ்கமவைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான தூக்க மாத்தரைகள் மீட்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து குறித்த மாத்திரைகளை விநியோகம் செய்த விநியோகஸ்தரின் அனுமதி பத்திரத்தை ரத்து செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விநியோகஸ்தரின் உறவினர் ஒருவர் கள் வியாபாரி. அவர் ஒரு நாளைக்கு 2,500 லீற்றர் கள்ளை உற்பத்தி செய்து, கள்ளில் 1000 தூக்க மாத்திரைகளை கலந்து விற்பனை செய்வதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதனால், அந்த கள்ளை அருந்துபவர்களுக்கு கூடிய போதை உண்டாகின்றது என்று அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் போதையை அதிகரிக்கும் நோக்குத்திடனேயே தூக்க மாத்திரைகளை கள்ளில் கலந்து விற்பனை செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச)



திருகோணமலை, புல்மோட்டையில் இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மத்திய கல்லூரியில் இடம் பெற்றபோது... (ச-40)

## இலங்கை நிராகரித்த எரிபொருள் தரமானது

### ‘இனோக்’ நிறுவனம் தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 23

உரியதரத்தை கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிராகரிக்கப்பட்ட தமது டீசல் உரிய தரத்தினைக் கொண்டது என்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் தேசிய எரிபொருள் நிறுவனமான ‘இனோக்’ தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் நடத்தப்பட்ட சுயாதீன ஆய்வுகளில் எரிபொருளானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிய தரத்தினை கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுதொடர்பான அறிக்கை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது என்று தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ள ‘இனோக்’ நிறுவனம், இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

உரியதரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்து நிராகரிக்கப்பட்ட எரிபொருளுக்குப் பதிலாக வேறு எரிபொருளை வழங்குவதாக முன்வைத்த யோசனை கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று ‘இனோக்’ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தொடர்பில் இணைந்து ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

## உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கொழும்புக்கு

### 31 இல் ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

கொழும்பு,ஜூலை 23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள 275 உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்களையும் கொழும்புக்குஅழைத்துஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்குவதற்கு அந்தக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை அந்தக் கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த 275 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை வழங்கும் கூட்டத்தை நடத்தவும் அந்தக் குழு தீர்மானித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)



# சாப்பாட்டுக் கடையில் மா மூடைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை, 23
ஆனைக்கோட்டையில் சாப்பாட்டுக் கடை ஒன்றை உடைத்த திருடர்கள்-மா மூடைகள் மற்றும் மேசைக் கண்ணாடியின் கீழ் வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத் தாள்களையும் திருடிச் சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-100)

# முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை, 23
தென்னை மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபரின் சடலம் நேற்று முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.
அச்சுவேலி தெற்கு,கைத்தொழிற்பேட்டை வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த இளையவன் நல்லதம்பி (வயது-66) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டார்.
அச்சுவேலிப் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-4-78)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
09-08-1946

இறப்பு
23-06-2013
திதி: 23.07.2013

வேலுப்பிள்ளை புவனதேவி (குஞ்சு)

இறைபதம் அடைந்து விட்ட அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் பங்கேற்ற சகல உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் வைத்தியசாலையில் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.07.2013) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேணி - 0773973523 Dr. காண்டீபன் - 0773040519
(பழைய விதானையார் வீடு)
உடுக்கியவளை, பிள்ளையார் வீதி,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை

தகவல்: மகள். மருமகன்.
பேரப்பிள்ளை. உடன் பிறப்புகள்.

(C/11004)

கண்ணீர் அஞ்சலி

மாதகல் பிரான்ஸ் நலன்புரி சங்க தலைவரும்
சமூகசேவையாளருமான
வி. பொன்னுத்துரை விஸ்வலிங்கம்

அவர்களின் மறைவை ஒட்டி பிரான்ஸில் வாழும் குடும்பத்தவர்களுக்கு அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைக் கழகம்,
யா/மாதகல் சென்யோசவ்
மகாவித்தியாலயம்.

(சி/11005)
(10,16,14)

கண்ணீர் அஞ்சலி



மதுரம் முன்பள்ளி நிறுவன இயக்குநர்
திருமதி முகுந்தா கிருபாகரன் அவர்களின்
அன்புத் தந்தை
பெரியதம்பி கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மதுரம் முன்பள்ளி,
இருபாலை.
(31080)
(10,6,27)
ஆசிரியர்கள்.

துயர் பகிர்கின்றோம்



மதுரம் கல்வி நிறுவன இயக்குநர்
S.K. கிருபாகரன் அவர்களின் மாமனார்
பெரியதம்பி கணேசலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மதுரம் கல்வி நிறுவனம்,
டச்சு வீதி, இருபாலை.
(31081)
(10,6,27)
ஆசிரியர்
நலன்புரி கழகம்

# வடமேல் மாகாணத் தேர்தலில் ரங்க பண்டார எம்.பி தனி வழி

வடமேல் மாகாண சபைத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்க பண்டார தனியான குழுவொன்றை களமிறக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.
அவருடன் ஐக்கிய தேசியக்கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான அசோக அபேசிங்கவும் இணைந்துக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தங்களுடைய குழுவில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகாவை முதன்மை வேட்பாளராகக் களமிறக்குவதற்கு முயன்றதாகவும் அதற்கு பொன்சேகா மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.
இந்நிலையில், வெளிநாட்டிலிருந்து நேற்றுக் காலை நாடு திரும்பிய அவர், தனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாகக் கட்சி அறிவித்துள்ளது.
ரணில் விக்ரமசிங்கவிடம் நான் மன்னிப்பு கோர வேண் டியதில்லை என்றும் கட்சியைச் சின்னாபின்னமாக ஆக்கியதையிட்டு அவரே கட்சி ஆதரவாளர்களிடம் மன்னிப்பு கோர வேண்டு மென்றும் தெரிவித்த அவர், ரணில் விக்ரமசிங்கவுக்கு நான் கடிதமெதனையும் அனுப்பவில்லை என்றும் தெரிவித்தார். (த)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## 30 பவுண் நகைகளுடன்'டிமிக்கி' கொடுத்த பெண்

வீட்டுப் பெண்ணிடமிருந்து இரவலாகப் பெற்றுக் கொண்ட சந்தேக நபரான பெண் பின்னர் அவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் நகைகளுக்கு உரித்துடைய பெண் அது தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
சந்தேக நபரான பெண்ணை பொலிஸார் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணையின் போது குறித்த நகைகளை மீளக் கொடுப்பதாகக் கூறிச் சென்றார். பின்னர் அவர் தலைமறைவாகி விட்டார்,
அதனால் சந்தேக நபரான அந்தப் பெண்ணின் கணவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். குறித்த பெண் கைது செய்யப்படவில்லை. நகைகளும் மீட்கப்படவில்லை.விசாரணைதொடர்கிறதுஎன்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## நேற்றுடன் முடிவுக்கு...

மும் ஒதுக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ ஆகியவற்றுக்கு தலா 2 ஆசனங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.
ஆசனப் பங்கீடுகள் முடிவடைந்துள்ள நிலையில் நாளை வேட்பாளர்களின் பெயர் விவரங்களை கட்சிகள் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

# கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வு புலம்பெயர் நாடுகளில் இன்று

ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி முதல் சுமார் ஒருவார காலத்துக்கு நாடு முழுவதும், குறிப்பாகத் தலைநகரில் தமிழர்கள் உயிருடன் எரியூட்டப்பட்ட, கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட, வீடுகள், வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்ட, எரியூட்டப்பட்ட கொடூரமிக்க நிகழ்வுகள் அரங்கேறிய நாள்.
இந்தக் கொடூரங்களினால் 3 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், 25 ஆயிரம் பேர் அங்கவீனர்களாயினர். ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களை இழந்து நிர்க்கதியாகினர்.
இந்த அவலங்களைச் சுமந்து 29 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பிரிட்டன் தமிழர் பேரவையினால் கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இன்று மாலை 4 மணியிலிருந்து இரவு 7 மணி வரை; பிரிட்டன் பிரதமர் அலுவலகத்தின் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (த-5)

# மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையுடன் அமெ. மோதல்

எய்ட்ஸ், போலியோ, மலேரியா போன்ற நோய்களுக்கு எதிரான போராட்டம், சைப்பிரசின் 66 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள், பாகிஸ்தானில் பெண்களின் உரிமைகள், பங்களாதேஷ் தொழிலாளர்களின் உரிமை என்பவை குறித்து சமந்தாபவர் முக்கிய கவனம் செலுத்தவுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அடுத்த ஆண்டு மார்ச் கூட்டத் தொடரின் போது இலங்கை விவகாரத்தில், ஐ.நாவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படவுள்ள சமந்தாபவர் தனது இறுக்கமான போக்கை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
பஜாஜ் கலிபர் NPGQ XXXX இலக்க முடைய
மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 0090425

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து
விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே
வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.
0779086737 GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

கார் விற்பனைக்குண்டு
NPJN - x x x x
தொடரிலக்கமுடைய NISSAN
SUNNY BLOEBIRD SYLVPHY
கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 201 3300

# முல்லைத்தீவு குடும்பஸ்தரை காணவில்லை

நிலையத்தில் நேற்று நண்பகல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
தங்கராசா ரவீந்திரன் (வயது -35) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

முல்லைத்தீவு நகரிலிருந்து முள்ளியவளைக்கு நேற்று முன்தினம் மதியம் சைக்கிளில் புறப்பட்டுச் சென்றுள்ளார். இதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் அவரது கைத்தொலைபேசி செயலிழந்து காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவரது மனைவி இது குறித்து நேற்று மதியம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (5)

# மீனவரைக் காணவில்லை

மாலை வரை இடம்பெற்றன. இருப்பினும் அவர் கண்டுபிடிக்கப்படவில்லை.
இதேவேளை, கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் தோணியுடன் காணாமற் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. (த-5)

75% சேல்




MICRO PC SYSTEMS
HOTLINE - 0773963280 Jaffna - 0212225893 Nelliyadi - 0212262929 Kilinochchi - 0773963278
Vavuniya - 0242221969 Trincomalee - 0212225893 Colombo - 0777308417



ஜெய் குருதேவ்
வாழ்வை வளமாக்கும் வாழும் கலைப் பயிற்சி
எளிமையான யோகாசனம், தியானம், சுதர்சனக்கிரியா
என்பவற்றை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
வாழும் கலை அமைப்பின் முதுநிலை ஆசிரியர் கணேஷ்ஜீ
அவர்களால் வழங்கப்பட உள்ளது. பயிற்சி பற்றிய அறிமுக உரை
25/07/2013 மாலை 6 மணி மகேஸ்வரன் மணி மண்டபம்- நல்லூர்.



பயிற்சி நடைபெறும் நாள்கள் (3 நாள்கள்)
26/07/2013 } மாலை 6மணி–9மணி
27/07/2013 }
28/07/2013 காலை 9மணி- பி.ப. ஒரு மணி

இடம்
துர்க்கா மணி மண்டபம்,
நல்லூர்.

தொடர்புகளுக்கு
0777268279- 0770662114

254, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்
23/07/2013



அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் 66 ஆவது ஆண்டு ஆடி விழாவை முன்னிட்டு பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியை நடத்தியது. அதில் பங்குகொண்ட துர்க்கா அணியினர் பலப் பரீட்சையில் ஈடுபட்ட போது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள்:

பி.ப. 3.30 மணி
அளவெட்டி பாரதி வி.க. எதிர் கைதடி துர்க்கா வி.க.
பி.ப. 4.30 மணி
நாவலர் வி.க. எதிர் கைதடி குமரநகர் வி.க.

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 23
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி
தாவடி காளியம்பாள் வி.க. எதிர் வட்டுக்கோட்டை செனிஸ்ரார் வி.க.
பி.ப. 5 மணி
குப்பிளான் விக்னேஸ்வரா வி.க. எதிர் ஆனைக் கோட்டை கலையொளி வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆண்களுக்கான அரை இறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.துரையாப்பா விளையாட்டரங்கில், இடம்பெறவுள்ள மோதவுள்ள அணிகளின் விவரம்:

மாலை 3 மணி
ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.
மாலை 4 மணி
வேலணை பிரதேச செயலக அணி எதிர் யாழ்.பிரதேச செயலக அணி. (ற-23)

## மகாஜனவை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்

கொழும்புத்துறை, ஜூலை 23
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் 15 வயது பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் பிரிவு III கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 184 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையே போட்டி மகாஜன மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 6 இலக்குகள் இழப்பிற்கு 303 ஓட்டங்களைக் குவித்தது.

சென்.ஜோன்ஸ் அணி சார்பில் பிளமிங் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களையும், யதுசன் 86 ஓட்டங்களையும் துலக்ஷன் 33 ஓட்டங்களையும், லியோனி ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜன அணி வீரர்களான டினேஸ் 10 பந்துப் பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ஜெலான் 8 பந்துப் பரிமாற்றங்களில் 54 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய மகாஜன அணியினர் 30. பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சரண்ராஜ் அதிகப்பட்சமாக 28 ஓட்டங்களைப் பெற்றார்.

சென்.ஜோன்ஸ் அணி சார்பாக பந்து வீச்சில் நிரோசன் 6 பந்துப் பரிமாற்றங்களில் 18 ஓட்டங்களுக்கு, 2 இலக்குகளையும் யதுசன் 6 பந்துப் பரிமாற்றங்களில் 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், லியோனி 4 பந்துப் பரிமாற்றங்களில் 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ற-135)

### களவத்துறை வி.க. மென்பந்து கிரிக்கெட் தொடர்

## வாகை சூடியது பொற்பதி வி.க.

யாழ்ப்பாணம், ஜூலை 23
அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் 66 ஆவது ஆண்டு ஆடி விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.



நேற்று முன்தினம் அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத் தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய முத்துத் தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுரேந்திரன் 3 ஓட்டங்களையும், லவன் 5 ஓட்டங்களையும், ராஜ் 11 ஓட்டங்களையும், கோபி ஆட்டம் இழக்காமல் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி சார்பில் திலீப் 2 இலக்குகளையும், றொக்மன் யாதவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

42 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக அணி 3.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அதில் றொக்மன் 3 ஓட்டங்களையும், சத்தியன் 2 ஓட்டங்களையும், நவயுகன், சுபாஸ்கரன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 21, 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி சார்பில் லவன், சுரேந்திரன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ற-23)

## இளவாலை யங்ஹென்றிஸிடம் பணிந்தது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இளவாலையங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் அமரர் சிவசோதி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தியிருந்தது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதற்பாதி ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் றோயல் அணி வீரன் கஜகோபன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதையடுத்து தமது அணிக்கான கோலினை அடிக்க வேண்டும் என்ற வேகத்துடன் இளவாலை யங்ஹென்றிஸ் அணி எதிர் அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் யங்ஹென்றிஸ் வீரர் சதீஸ்வரன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியாகப் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்து ஆட்டத்தை சமன் செய்தார்.

அதையடுத்து ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. ஊரெழு றோயல் அணி தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர்.

மீண்டும் ஒரு சந்தர்ப்பம் யங்ஹென்றிஸ் அணிக்கு கிடைத்தது. யங்ஹென்றிஸ் அணி வீரன் கியூட் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் எதனையும் பெறவில்லை.

இறுதியில் இரு அணியினதும் மேலதிகமாக எந்தவித கோல்களையும் பெறாத நிலையில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியினர் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

சிறந்த கோல் காப்பாளராக இளவாலை யங்ஹென்றிஸ் அணி வீரன் தமிழ் செல்வனும், சிறப்பு ஆட்டக்காரராக அதே அணியைச் சேர்ந்த சதீஸ்ºம் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## கிண்ணம் வென்றது சென்.ஜோசப் வி.க.

யாழ்ப்பாணம், ஜூலை 23
மன்னார் உதைபந்தாட்ட லீக் மற்றும் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் அமரர் மரியாம்பிள்ளை முத்தம்மா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பற்றுபற்றும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணி மோதிக்கொண்டது.



இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றதையடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பினாகத் தெரிவாகியது.


சிறந்த வீரராக மன்னார் மனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணி வீரன் பிறின்லியும், சுற்றுத்தொடரின் ஆட்டநாயகனாக அதே கழக வீரன் பவுணும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த கோல் காப்பாளராக திருகோணமலை மாவட்ட அணி வீரன் தெரிவானார். (ற-23)




# இங்கிலாந்தின் வேகத்தில் சுருண்டது ஆஸ்திரேலியா

5 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரில், 2 ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

ஆஷஷ் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை இங்கிலாந்து அணி 347 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி கொண்டது. ஆட்டத்தின் 4 ஆவது நாளிலேயே இங்கிலாந்து அணி இந்த அபார வெற்றியைப்பெற்றுக்கொண்டது.
லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இயன் பெல்லின் 109 ஓட்டங்கள், ஜொனி பெயர்ஸ்ரோவின் 67 ஓட்டங்கள், ஜொனதன் ட்ரொட்டின் 58 ஓட்டங்களின் துணையோடு 361 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹரிஸ் 5 இலக்குகளையும், ஸ்டீவன் ஸ்மித் 3 இலக்குகளையும், ஜேம்ஸ் பற்றின்சன், ஷேன் வொட்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 128 ஓட்டங்களுக்குச் சகலஇலக்குகளையும்இழந்தது.






ஆஸியின் சார்பாக ஷேன் வொட்சன் 30 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிறேம் ஸ்வான் 5 இலக்குகளையும், ரிம் பிரெஸ்னன் 2 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ருவேர்ட் ப்ரோட் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
அதன்பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, ஜோ றூட்டின் 180 ஓட்டங்கள், இயன் பெல்லின் 74 ஓட்டங்களின் துணையோடு, 7 இலக்குகளை இழந்து 349 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.
பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 3 இலக்குகளையும், றயன் ஹரிஸ் 2இலக்குகளையும், ஜேம்ஸ் பற்றின்சன், ஸ்டீவன் ஸ்மித் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
583 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 90.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்று, 347 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக உஸ்மான் கவாஜா 54 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 51 ஓட்டங்களையும், ஜேம்ஸ் பற்றின்சன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிறேம் ஸ்வான் 4 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஜோ றூட், ரிம் பிரெஸ்னன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
ஆட்டத்தின் நாயகனாக ஜோ றூட் தெரிவானார்.
5 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரில், 2 ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.(ற)

# பாகிஸ்தான் அபாரம்; மண்டியிட்டது தீவுகள்




மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரின் 4ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி டக் வேர்த் லூயிஸ் முறையில் 6 இலக்குளால் இப்போட்டியில் வெற்றிபெற் றது.
சென். லூசியாவில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
மழை காரணமாகத் தாமதித்து ஆரம்பித்த இந்த ஆட்டம், 49 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக மாற்றப்பட்டது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 49 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது இலக்கை 20 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இழந்த அவ்வணி, 4 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் 5ஆவது இலக்குக்காக மார்லன் சாமுவேல்ஸ், லென்டில் சிமன்ஸ் இருவரும் 14.5 பந்துப்பரிமாற்றங்களில் 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணிக்கு வலுச் சேர்த்தனர்.
துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 104 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களையும், லென்டில் சிமன்ஸ் 44 பந்துகளில் 46 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்ள்ஸ் 48 பந்துகளில் 32 ஓட்டங்களை கிறிஸ் கெய்ல் 46 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் இர்பான் 60 ஓட்டங்களுக்கு 2இலக்குகளையும், ஜுனைட் கான், வகாப் றியாஸ், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
49 பந்துப்பரிமாற்றங்களில் 262 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 17 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.
ஆட்டம் மீள ஆரம்பிக்கும் போது, பாகிஸ்தான் அணிக்கு 31 பந்துபரிமாற்றங்களில் 189 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.
வழங்கப்பட்ட இலக்கை பாகிஸ்தான் அணி 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து அடைந்தது.
துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 62 பந்துகளில் 59 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், உமர் அக்மல் 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கேமர் றோச், ஜேஸன் ஹோல்டர், டுவைன் பிராவோ ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் மார்லன் சாமுவேல்ஸ் தெரிவானார்.
(ற)



# பட்டம் வென்றார் செரீனா

சுவீடிஷ் பகிரங்க மகளிர் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் சுவீடிஷ் வீராங்கனை ஜோகன்னா லார்சனுடன் மோதிய செரீனா 6:4 என்ற கணக்கில் முதல் செற்றை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

தொடர்ந்து இரண்டாவது செற்றி லும் ஆதிக்கம் செலுத்திய அவர், ஜோகன்னாவின் ஆட்டத்தை எளிதாக முறியடித்து புள்ளி களைக் குவித்தார்.



வெறும் 1 மணி 18 நிமிடம் மட்டுமே நீடித்த இந்த ஆட்டத்தில், செரீனா 6:4, 6:1 என்ற நேர் செற்களில் எளிதாக வென்று கிண்ணத்தை கைப்பற்றினார்.

இந்த ஆண்டில் செரீனா பெறும் 51 ஆவது வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது.


(ற)

**Sky Computers (Pvt) Ltd**
இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகாமையில்)
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
♣Ms office, DTP, Video Mixing, Web Design, Graphic Design, Computer Type Setting, Internet & E-mail, Kids Programme
Dip. in Mobile Phone Repairing
(காலம் - 3 மாதங்கள் - 3000/=)
Dip. in Hardware & Networking
(காலம் - 3 மாதங்கள் - 3000/=)
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
TP:- 021-222-1417

**உதவியாளர்கள் தேவை**
சித்தன்கேணியில் இயங்கும் கிளினிக்குக்கு (ஆண், பெண்) உதவி யாளர்கள் தேவை.
வேறு தொழில்புரிபவர்களும் பகுதி நேரமாகக் கடமையாற்றலாம்.
தொடர்பு: 0779227581

# சிரேஷ்ட வீரர்களின் பங்களிப்பே காரணம்

## வெற்றி குறித்து தினேஷ் சந்திமால்



சிரேஷ்ட வீரர்களின் பங்களிப்பே தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணம் என்று இலங்கை அணித் தலைவர் தினேஷ் சந்திமால் தெரிவித் துள்ளார்.

துடுப்பாட்டத்தில் மஹேல ஜெயவர் தன மற்றும் குமார் சங்ககார ஆகியோர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணியில் முன்னாள் அணித் தலை வர்கள் மூவர் உள்ளமை அணிக்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்தது என்றும் தினேஷ் சந்திமால்தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்கிந்தியத்தீவுகளில் இடம்பெற்ற மும்முனை போட்டித் தொடரில் இறுதி போட்டியில் தோல் வியடைந்தமையினால் தொடரும் போட்டிகளில் வெற்றிபெற வேண்டும் என்ற மனநிலையே தமது அணி வீரர்கள் மத்தியில் நிலவுகின்றது என்று அணியின் உபதலைவர் லஹிரு திரிமனே தெரிவித்தார்.



இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி வீரர் ஜேபி டுமினி இரண்டாவது ஒருநாள் ஆட்டத்துக் கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது மழை குறுக்கிட்டது. மழையிடம் இருந்து தப்பிக்க எத்தனிக்கும் டுமினி.

தற்போது யாழ் நகரில்...




இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்
**CAD & BS** Computer Aided Design & Building Studies
With **MEP** Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

Duration : 6 Month
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Building Careers - Transforming Lives
www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**ஞானோதய அக்கடமி**
சங்கத்தானை, சாவகச்சேரி
அனுபவமும் திறமையும் வாய்ந்த துறைசார் நிபுணத்துவம் மிக்க யாழ்மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்
"தொழில்நுட்பவியல் பாடத்துறை"
(Technology Stream)
✱ ஆரம்பம்- 24.07.2013 புதன் at 3.00 p.m
துறைசார் சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன. "உங்களின் சிறப்பான எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நாடவேண்டிய ஒரே நிறுவனம்" நிர்வாகம்.

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**A/L 2015 Technology Stream**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Science for Technology ICT
திரு.இ.குமரன் - B.Sc.
கடந்த 12 வருடங்களாகக் கணினிக் கற்கையில்.....
74, Sabapathy Lane, Jaffna - Near Kokuvil
0776577359

**காணி குத்தகைக்கு**
யாழ்ப்பாணம், கண்டி வீதி, இல.346, (அரஸ்கோ கம்பனிக்கு முன்னால்) 9 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு:-
0776365791- 021 222 7878

**BIT University of Colombo** BIT
புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள்
A/L 3 pass or O/L + Foundation in IT ( FIT )
திரு.இ.குமரன் - B.Sc.
கடந்த 12 வருடங்களாகக் BIT கணினிக் கற்கையில்.....
74, Sabapathy Lane, Jaffna - Near Kokuvil
0776577359

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.